Registered No. M-4483 Madras War Review (TAMIL) 31-3-1944

யுத்த சஞ்சிகை

மலர் IV 1944-௵ மார்ச்சு௴ 31௳, வெள்ளிக்கிழமை இதழ் 30

கவர்னர் மாளிகை,
கிண்டி,
7-3-1944.



மேன்மை தங்கிய சர் ஆர்தர் ஹோப்.

எனது பூரண நம்பிக்கை

கஷ்டப்படுவோர்க்கு உதவுதல் மனித சமூகத்தின் உன்னத லட்சியங்களில் ஒன்று. அதை நிறைவேற்றிவைக்க செஞ்சிலுவை செண்ட் ஜான் கூட்டு யுத்த ஸ்தாபனம் முயற்சிக்கிறது.

நோயாளிகளுக்கும் காயப்பட்டவர்களுக்கும் சௌகரியங்களையும், எதிரி வசமிருக்கும் கைதிகளுக்குத் தேவையான வசதிகளையும் இது அளிக்கிறது.

ஒப்புயர் வில்லாத தம் தாராளத் தன்மையையும், இந்தத் தலை சிறந்த திருப்பணியில் தமக்கு ஏற்பட்டுள்ள ஆர்வத்தையும் சென்னை மக்கள் ஏற்கெனவே காண்பித்திருப்பது போலவே, மீண்டும் காட்டுவார்கள் என்னும் பூரண நம்பிக்கையுடன், அவர்களுக்கு இந்த வேண்டுகோளை நான் விடுக்கிறேன்.

(ஒப்பம்) ஆர்தர் ஹோப்,

சென்னை கவர்னர்.

பொருளடக்கம்.

	பக்கம்.
முகப்புப் படம்: மேன்மை தாங்கிய சர் ஆர்தர் ஹோப்	1
எனது பூரண நம்பிக்கை	1
முரசொலி	2
தலையங்கம்: "பிறர் துன்பங்களைக"	3
செஞ்சிலுவை விழா	4
யுத்தக் கைதிகளுக்கு வசதிப் பொருட்கள்	5
ஹிட்லர் ஆரம்ப பேச்சு பொய்யானது	6
பிரயாணக் குறைப்பும் தேசியச் சேமிப்பும்	7
அவர்கள் ஜெயிக்க, இவர்கள் தோற்ப தேன்?	8
விளம்பரம்: S. S. S.	10
யுத்த நாட் குறிப்புக்கள்	12

முரசொலி

"உலக சரித்திரத்திலேயே இது வரை ஏற்பட்டிராத மகத்தான தோர் யுத்தத்தின் கடைசி நிலைமையில் நாம் இப்போது இருக்கிறோம். இப்போது நாம் தடுமாற முடியாது. யுத்தத்தை முடிவு கட்டுவதாக, தென்னாப்பிரிக்கா உறுதி கொண்டிருக்கிறது."

—ஜெனரல் ஸ்மட்ஸ்,
கேப் டவுனில் மார்ச்சு மாதம் 25-ம் தேதி கூறியது.

* * * *

"இது வரை வந்த கெட்ட செய்திகளை விட, நல்ல செய்திகள் தான் மிகவும் அதிகம். இது பற்றி சந்தேகமே கிடையாது. நேச நாடுகளின் வெற்றிப் போக்கு உறுதியாகவும், தொடர்ச்சியாகவும் விரைவாகவு மிருக்கிறது. இதன் நெடும் போக்கு மகா கடுமையானது. மீட்சிப் படலம் படிப்படியாக நடைபெறுகிறது. நாம் நம் நோக்கத்தை விரைவில் ஈடேற்றிக் கொள்ளுவோம் என்பதற்கான நேர்மையான சின்னங்கள் காணப் படுகின்றன. வெற்றி கிடைக்கும். அது நிச்சயம், மற்றென்றும் நிச்சயம். அதாவது, பிரிட்டிஷாராகிய நாமும், மற்ற நேச நாட்டினரும் ஒரே நோக்கத்தோடும், ஒன்று பட்டு செயலாற்றுவதாலும், அது விரைவில் கிடைக்கும்."

—மிஸ்டர் சர்ச்சில்,
மார்ச்சு மாதம் 26-ம் தேதி ஒலி பெருக்கிய சொற்பொழிவில் கூறியது.

* * * *

"அமெரிக்க இராணுவ அதிகாரிகள் எதிர் பார்த்ததை விட வெகு விரைவாக, அமெரிக்க விமானப் படை பெருகி எல்லாப் போர் முனையிலும் உயர் நிலையை யடைந்து கொண்டிருக்கின்றது."

—ஜெனரல் ஜார்ஜ் மார்ஷல்,
அமெரிக்க இராணுவ உத்தியோகத தலைவர் மார்ச்சு மாதம் 22-ம் தேதி கூறியது.

* * * *

"தூரக் கிழக்கு நாடுகளின் பாதுகாப்பிற்கான பாய்ச்சல் தளம், இலங்கை தான். எதற்கும் அது ஆயத்தமா யிருக்கிறது."

—டாக்டர் சி. டி. ஹார்ஸ்லி,
கொளும்பு பிஷப்பு மார்ச்சு மாதம் 24-ம் தேதி கூறியது.

* * * *

"உலகமே இது வரை கண்டிராத தோர் மாபெரும் போராட்டத்திற் பங்கு கொள்ள, நாம் ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறோம். இந்தப் போராட்டம் எவ்வளவு காலம் நடைபெறும்? இதை யாரும் நிச்சயமாகச் சொல்ல முடியாது. ஒரு வருஷ காலம் நடக்கலாம், அதற்கு மேலுங் கூட நடக்கலாம். அது ஒரு மகத்தான 'கோஷ்டி'யா யிருக்கும். நாம் நிச்சயமாக வெல்லுவோம். முதலில் நாம் கொஞ்சம் தோற்றோம். என்றாலும், இப்போது நாம் தான் வென்று கொண்டு வருகிறோம். இதில் வெற்றி பெற்றால், முழு வெற்றி யடைந்தாற் போல் தான். நம்மில் யாராவது தோற்பதற்கு இடங் கொடுத்து விட்டால், நாம் தோல்வி யடைந்தது போலத் தான்."

—ஜெனரல் மண்ட்காமரி,
லண்டனிலுள்ள பிரிட்டிஷ் தாக்கும் படைத் தலைவர்
மார்ச்சு மாதம் 24-ம் தேதி கூறியது.

* * * *

"ஒரு புதிய உலகத்தை அமைக்க நேச நாடுகள் போராடிக் கொண்டிருக்கின்றன. அந்த உலகத்தில் கொடுமையும் அக்கிரமும் இருக்க முடியாது; அது, விடுதலை, சமத்துவம், நீதி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அமையும். அனைவரும் இன, சாதி, மத வேற்றுமை யில்லாமல், சமாதானத்தோடும், கண்ணியத் தோடும், பெரு மிதத்தோடும் வாழுவார்கள்."

—தலைவர் ரூஸ்வெல்ட்,
மார்ச்சு மாதம் 24-ம் தேதி பத்திரிகைப் பிரதிநிதிகளிடம் கூறியது.

யுத்த சஞ்சிகை

வார வெளியீடு

மலர் IV | 1944-ம் ஸ்ரீ மார்ச்சுமீ 31உ, வெள்ளிக்கிழமை | இதழ் 30

பிறர் துன்பங் களைக!

"பிறர் துன்பங் களைக"! என்பது ஒரு அழகிய சொற்றொடர்.

இதன் அமைப்பே, ஒருவருக் குள்ள கோபம், வெறுப்பு, பழிவாங்குந் தன்மை ஆகியவற்றைப் போக்கி, இரக்கம், கருணை, உதவி ஆகிய எண்ணங்களை ஊக்கும்.

மனித அமைப்பில், உள்ளம் நெகிழும் இன்பத் துறைகளில், நாள்தோறும் கொஞ்ச நேரமாவது, சில வாரங்களை செல விட்டு, சென்னையிலுள்ள நாம் வாழுவதனால், நம் மனோபலம் கெட்டுப்போகாது.

விரைவில், திடீரென்று, ஒரு நாடு 5 லட்சம் பேர்களைப் பலி கொடுக்க, வருத்தத் தோடு ஆனால் பெருமிதத் தோடு எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறது என்று இன்றையப் பத்திரிகைகள் கூறுகின்றன.

சென்ற நான்கு வருஷங்களாக ஏழு கடல்களிலும் மூன்று கண்டங்களிலும், அநேகத் தீவுக் கூட்டங்களிலும், ஆகாய வீதிகளிலும் ரத்தக் களறியாக்கிய இந்த யுத்தத்திற்கு பலியானவர்களுக்குத் துணையாக, இன்னும் 5 லட்சம் பேர்களைப் பலி கொடுக்க ஒரு தனி நாடு துணிந்திருக்கிறது.

இது எந்த நாடா யிருந்தாலும் பரவா யில்லை. இதே நிலையை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் மற்ற பல நாடுகளுமுண்டு. இங்கே நேரும் சேதங்களில் பெரும்பகுதி, மரணங்கள் தான்.

என்றாலும், இன்னும் நூறாயிரக் கணக்கானவர்களுக்கு அதிகமான பேர்கள், கொல்லப்படாமல் இருக்கிறார்கள். உடனடியாக ஏற்படக் கூடிய மரணத்திற்கு இவர்கள் தப்பித்துக் கொள்ளுகிறார்கள். இவர்கள் எந்த நாட்டவரா யிருந்தாலும் பரவா யில்லை. அவர்களும் மக்கள் இனத்தைச் சேர்ந்த இளைஞர்கள், வலியவர்கள், வீரர்கள். அவர்கள் நோய்ப்பட்டோ, காயப் பட்டோ, யுத்தக் கைதிகளாகவோ இருக்கலாம்.

அவர்களுக்கு இப்போதே கட்டாயம் தேவையா யிருப்பவை, உலகம் முழுவதிலும் செஞ்சிலுவையும் செண்ட் ஜானும் அளிக்கும் எல்லா வகை உதவிகளுந் தான். இந்த உதவிகளையும், இன்னும் அதிகமாகவும், அது வழங்கக் கூடும்.

இந்த மகத்தான ஸ்தாபனம் தன்னால் இயன்றவரை மிகச் சிறந்த முறையில் தொண்டாற்றிக் கொண்டு வருகிறது. ஆனால், போதுமான அளவிற்குத் தொண்டாற்ற அதனால் முடியாது. அதற்கு உதவி மிகவும் அவசியம். அந்த ஸ்தாபனம் இந்த வருஷத்தில் மட்டும் இந்தியாவிற்காக மட்டும், தான் எதிர்பார்க்கும் வேலையைச் செய்து முடிக்க, 3 கோடி ரூபாய் தேவையா யிருக்கிறது. இன்னும் எதிர் பாராத செலவுகளும் வந்து சேரும்.

இதற்கு சென்னை உதவும், அதுவும் கட்டாயம் உதவும் "பிறர் துன்பங் களைக."!

செஞ்சிலுவை விழா

செஞ்சிலுவை செண்ட் ஜான் கூட்டு ஸ்தாபன வேலைகளைக் குறித்து, சமீபத்தில் பத்திரிகைகளில் அநேக விளம்பரங்கள் வெளிவந்திருக்கின்றன. விசேஷ செஞ்சிலுவை வார விழாவைக் குறித்து இவை குறிப்பிடுகின்றன. இந்தியாவின் பெரும் பகுதிகளில் இந்த விழா ஜனவரி மாதம் 30-ம் தேதி முதல் பிப்ரவரி மாதம் 6-ம் தேதி வரை நடை பெற்றது. இந்நாட்டின் வேறு சில பகுதிகளில் இந்த விசேஷ வேண்டுகோள் விடுக்க, வேறொரு சமயத்தை ஏற்படுத்திக் கொண்டார்கள். அந்தப் பகுதிகளில், சென்னையும் ஒன்று. தனிப்பட்ட விழாவாக இதை நடத்த வேண்டுமென்ற ஆசையினால் இப்படி ஏற்பாடு செய்யவில்லை. ஆனால், டிபென்ஸ் சேவிங்ஸ் திட்ட விழாவும் இந்த விழாவும் ஒரே காலத்தில் வந்ததனால் தான், செஞ்சிலுவை விழாவைத் தனியாக நடத்த வேண்டியதாயிற்று. தொகைகளை மிச்சப்படுத்த வேண்டியது எவ்வளவு அவசியமோ, அவ்வளவு அவசியந்தான் செஞ்சிலுவைத் தொண்டும். இந்த இரு விழாக்களையும் ஒரே காலத்தில் நடத்தி பொது மக்களுக்கு அசௌகரியத்தை யுண்டாக்கக் கூடாது என்பதற்காகத் தான், இது ஒரு தனி விழாவாகக் கொண்டாடப்படுகிறது. ஆகவே தான், சென்னை மாகாணத்தில் இந்த விசேஷ செஞ்சிலுவை விழா ஏப்ரல் மாதம் 1-ம் தேதி முதல் 16-ம் தேதி செஞ்சிலுவை ஞாயிற்றுக்கிழமை வரை நடை பெறும்.

ஏன் கூட்டு ஸ்தாபனமாக வேண்டும் ?

செஞ்சிலுவை செண்ட் ஜான் கூட்டு யுத்த ஸ்தாபனத்தைக் குறித்து பல கேள்விகள் கிளம்புகின்றன. இவ்விரண்டும் கூட்டு ஸ்தாபனமா யிருக்க வேண்டியது ஏன்? என்பது இக்கேள்விகளுள் ஒன்று. ஒரே வேலையைச் செய்ய இரண்டு ஸ்தாபனங்கள் ஏன் ஒன்றுபட வேண்டும்? இவ்விரு ஸ்தாபனங்களின் நோக்கமும் ஒன்று தான். நோயாளிகளுக்கும் காயம் பட்டவர்களுக்கும் உதவுவது தான் அவற்றின் வேலை. என்றாலும், இவை செய்யும் வேலை முறையில் மாறுபாடுண்டு. செண்ட் ஜான், ஆண்களுக்கும் பெண்களுக்கும், முதலுதவியாளர் பயிற்சியும் பராமரிப்பாளர் (நர்ஸ்) பயிற்சியும் அளிக்கின்றது. செஞ்சிலுவையோ, பலவகைப் பொருட்களையும், ஆஸ்பத்திரித் தேவைப் பொருட்களும், ஸ்டோர்ஸ்களும், நோயாளிகளுக்கும் யுத்தக் கைதிகளுக்கும் வசதியும் இன்பமும் அளிக்கத் தக்கவைகளையும் வழங்குகிறது. இவ் விரண்டு வகைத் தொண்டுகளும் ஒன்றிற்கொன்று தொடர்புடையது என்பது வெளிப்படை. அவை ஒன்றிற்கொன்று மாறுபட்டதுங் கூட.

கூட்டு ஸ்தாபனத்திற்கும் செஞ்சிலுவைக்கும் தொடர்பு

கூட்டு யுத்த ஸ்தாபனத்திற்கும் செஞ்சிலுவைக்குமுள்ள தொடர்பென்ன என்னும் கேள்வியும் எழுகிறது. இந்திய சட்டசபையார் நிறைவேற்றிய தோர் சட்டத்தை ஆதாரவாகக்கொண்டு நடை பெறுவது, செஞ்சிலுவைச் சங்கம். அதன் அமைப்பு, விதிகள், அங்கம், வேலை முதலியவை சட்டப்படி வகுக்கப்பட்டிருக்கின்றன. இந்தியாவிற்குள் துன்பம் வராமல் தடுத்து, துன்பப்படுகிறவர்களுக்கு மீட்சி யளிப்பது தான், அதன் வேலை. முக்கியமாக, தாய்மாரிடையேயும், குழந்தைக ளிடையேயும், சுகாதாரக் கல்வியூட்டுவதிலும், வெள்ளம், பஞ்சம் போன்ற கொடுந் துன்பங்களுக்கு மக்கள் ஆளாகும்போது தொண்டு செய்வதிலும் தான், அதன் வேலை பொருந்தி யிருக்கிறது. இந்தக் கூட்டு யுத்த ஸ்தாபனம் தற்காலிகமானது; எளிதில் செயலாற்ற வல்லது. அங்கத்தினர்களுக்குரிய விசேஷ விதிகள் இதற்குக் கிடையாது. இந்திய செஞ்சிலுவைக்கும் இதற்கும் மிகுந்த வேற்றுமை யுண்டு. என்றாலும், ஒரே சாராரே இவ்விரண்டிலும் வேலை செய்கிறார்கள். இதன் வேலை இந்தியாவுக்கு அப்பாலும் நடை பெறுகிறது. மத்தியதரைக் கடற் பகுதி, பாரசீகம், ஈராக், ஏடன், இலங்கை முதலிய நாடுகளிலுள்ள இந்திய இராணுவ வைத்தியசாலைகளுக்கும் சப்ளைகள் அனுப்ப வேண்டிய பொறுப்பு இந்த ஸ்தாபனத்தைச் சார்ந்தது. அன்றியும் தென் கிழக்குப் போர் முனைக்குச் செல்லும் இந்திய இராணுவ வைத்தியசாலைகளுக்குத் தேவையான பொருட்களை யெல்லாம் அனுப்ப வேண்டியதும், இதன் பொறுப்புத் தான். இது இலேசான வேலையல்ல. இதற்கு நமக்குப் பணம் வேண்டுமென்பது பற்றி ஆச்சரியப்படத் தேவையில்லை.

அரசாங்கம் ஏன் அளிக்கக் கூடாது ?

மற்றொரு கேள்வி எழுகிறது. அதாவது இவற்றை எல்லாம் அரசாங்கம் ஏன் அளிக்கக் கூடாது? இந்த வேலைகளை நாம் ஏன் செய்ய வேண்டும்? இதற்குப் பல காரணங்களுண்டு. முதலாவதாக, ஒரு ஆஸ்பத்திரிக்கு வழங்கப்பட வேண்டிய திட்டம் பல வகைகளில் குறைவாயிருக்கிறது. அவை அப்படி குறைவாயிருக்கக் கூடாது தான். அதற்காக, நடக்கிறபடி நடக்கட்டுமென்று நாம் சும்மா இருந்து விடலாமா? நோயாளிகளுக்கும் காயப்பட்டவர்களுக்கும் தேவையான பொருட்கள் கிடைக்கா விட்டால் போகிறது என்று சும்மா யிருந்து விட முடியுமா? அந்தத் திட்டத்தையே மாற்றி யமைத்தால் மிகவும் நல்லது தான். இது 'மலையைக் கெல்லி எலி பிடிப்பது' போலத் தான். இந்தக் காரியத்தைச் செய்து முடிக்கக் கூடியவர்கள் வரட்டும். அதற்கிடையில் மற்றவர்கள், தம்மாலானதை ஆஸ்பத்திரிகளுக்குச் செய்ய வேண்டுமென்று கருதுகிறோம். அதுவும் விரைவாகச் செய்யப்பட வேண்டும். ஏனென்றால் ஆர்ட்னென்ஸ் ஸ்டோர்ஸ்காரர்கள் எந்தக் காரியத்தையும் விரைவாகச் செய்வதே கிடையாது. பொருட்கள் அவசரமாக வேண்டும். ஆஸ்பத்திரி இலாக்காக்காரர்களோ, அந்தப் பொருட்களை அனுமதிப்பதா கூடாதா என்பதைக் குறித்து ஆலோசிப்பதிலேயே பொழுது கடந்துவிடும். இது ஒரு சிக்கலான நிலை. ஆனால் நமது கூட்டு யுத்த ஸ்தாபனத்தில் இந்த மாதிரிச் சிக்கல்களே கிடையாது. அன்றியும் மிகச் சிறந்த முறையில் வழங்கப்பட்டிருக்கும் ஆஸ்பத்திரிகளிலும் கூட, நோயாளிகளுக்கு விசேஷ வசதிகளும் சௌகரியங்களும் தேவை. உதாரணமாக, விளையாட்டுப் பொருட்கள், கைத் தொழிற் கருவிகள், புத்தகங்கள் முதலியவை அவர்களுக்கு வழங்கப்பட்டால், அவர்கள் இலகுவில் பொழுது போக்குவார்கள். இவற்றை நாம் கட்டாயம் வழங்கத் தான் வேண்டும்.

யுத்தக் கைதிகளுக்கு சப்ளை

செஞ்சிலுவை வேலையின் மற்றொரு பகுதியு மிருக்கிறது. அது தான், யுத்தக் கைதிகளுக்கு சப்ளைகள் அனுப்புவது. இந்தியாவி லிருந்து போய் யுத்தக் கைதியாகி, ஐரோப்பாவிலுள்ள பல சிறை முகாம்களிலு மிருக்கிற இந்தியர்களுக்கு, லண்டனிலுள்ள 'இந்தியா விடுதி' யினின்று வாரந்தோறும் அனுப்பப்படும் பார்சல்களின் செலவை நாம் தான் கொடுக்கிறோம். அன்றியும் தூரக் கிழக்கு நாடுகளில் யுத்தக் கைதிகளா யிருப்பவர்களுக்கு, உணவு, துணி, வைத்தியப் பொருட்கள் முதலியவற்றை மொத்தமாக அனுப்பிக் கொண்டிருக்கிறோம். சென்ற அக்டோபர் மாதம் யுத்தக் கைதிகளை மாற்றிக் கொள்ளும் பொருட்டு, இங்கு வந்த ஜப்பானியக் கப்பல் நிறைய, சப்ளைகளை, யுத்தக் கைதிகளாக ஜப்பானியர் வசமுள்ளவர்களுக்கு, ஏற்றிக் கொண்டு சென்றது.

பெருந் தொகை வேண்டும்

இவற்றிற் கெல்லாம் பணம் வேண்டும். வருஷா வருஷம் அதிகப் பணம் வேண்டும். சென்ற வருஷம் $1\frac{1}{2}$ கோடி ரூபாய் வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தோம். அத்தொகை கிடைத்தது. இந்த வருஷம் ஆஸ்பத்திரிகளுக்கு $1\frac{3}{4}$ கோடியும், யுத்தக் கைதிகளுக்கு $1\frac{1}{4}$ கோடியும் ஆக 3 கோடி ரூபாய்த் தேவையா யிருக்கிறது. இதற்காகத் தான் இந்த விசேஷ வேண்டுகோள். சென்னை 30 லட்ச ரூபாய் வசூலித்துவிடுமென்று எதிர் பார்க்கப்படுகிறது. பணமனுப்புகிறவர்கள், "செஞ்சிலுவைக்கு," அல்லது "கூட்டு யுத்த ஸ்தாபனத்திற்கு" என்று குறிப்பிட்டு, சென்னை கவர்னர் மாளிகை, பாங்கு வெட்டிங் ஹால், கவர்னர் யுத்த நிதிக்கு என்று அனுப்பவும். இது கூட்டு யுத்த ஸ்தாபனத்தின் மாகாணப் பகுதி. இந்தத் தொகைகளையும், "செஞ்சிலுவைக்கு," அல்லது "துருப்புகளுக்கு வசதிகள் செய்து கொடுப்பதற்கு" என்று குறிப்பிட்டனுப்பவும். ஒரு வாரம் மட்டும் நீங்கள் உதவி செய்தால் போதாது; எப்போதும் உங்கள் உதவி தேவை.

யுத்தக் கைதிகளுக்கு வசதிப் பொருட்கள்
செஞ்சிலுவை சென்ட் ஜான் பேருதவி

ஒரு கைதி முகாம். சுற்றிலும் முள் வேலி. இரவும் பகலும் காவலர்கள். மிகச் குறைந்த உணவு. மற்றும் பலவகை அசௌகரியங்கள். இந்த நிலையில் யுத்தக் கைதியா யிருந்தால் எப்படி யிருக்கும் என்பது பற்றி நீங்கள் எப்போதாவது நினைத்துப் பார்த்ததுண்டா?

யுத்தக் கைதிகளா யிருக்கும் நம்மவர்கள், எவ்வளவு கடுமையான விரக்தியோடும் மனதுடைந்தும் போய் இருக்கின்றார்கள் என்று நீங்கள் எண்ணிப் பார்த்ததுண்டா?

சொந்த ஊர்; வசதியான வீடு; அன்புள்ள நேயர்கள்; ஆசைக்குரிய மனைவி; இன்பங் கொடுக்கும் குடும்பம்; நல்ல தொழில், இவற்றை யெல்லாம் விடுத்து பெருந் தியாகம் செய்து, இப்போது கைதியா யிருக்கிறவர், படையில் சேர்ந்தார். இது பற்றி சந்தேகமே கிடையாது. அவருடைய நாடு தன்னைத் தற்காத்துக் கொள்ளும் பொருட்டு, யுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறது.

யுத்தக் கைதிகளின் துயரங்கள்

ஒரு வேலையு மில்லை; சும்மா உட்கார்ந்து கொண்டிருக்க வேண்டியது தான். வெகு தூரத்திற் கப்பால் உள்ள அன்பர்களையும், இன்னும் போராடிக் கொண்டிருக்கும் தோழர்களையும் நினைந்து நினைந்து உருகிக் கொண்டே யிருக்கும் இந்தக் கைதிகளின் நிலையைப் பற்றி, நீங்கள் சிந்தித்துப் பார்த்ததுண்டா?

உள்ள துன்பங்களுக்குத் துணையாக மழை காலமும் வந்து விடுகிறது. உடுப்பும், கம்பளியும், உணவும் போதாது. ஆகவே, கைதிகளா யிருப்பவர்கள் குளிரில் நடுங்குகிறார்கள். நிர்க்கதியான நிலைமையி லிருக்கிறார்கள். துன்பமே உருவாய்த் துலங்குகிறார்கள். நெடு நாட்களாக வெகு சுருசுருப்பாக இராணுவத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்த இவர்களுக்கு, இப்போது சும்மா இருப்ப தென்றால், மிகவும் கஷ்டமாகத்தான் இருக்கும்.

நாட்கள் பல கடந்து கொண்டே போகின்றன. ஆனால், நிகழ்ச்சிகளில் எவ்வித மாறுதலு மில்லை. இரண்டு வேளை உணவு தான் கிடைக்கிறது. அதுவும் ஒரு ரொட்டித் துண்டும் அரை புட்டி 'சூப்' பும் மட்டுந்தான். காலையிலும் மாலையிலும் இதுவே தான். ஒவ்வொரு நாளும் இதுவே தான் உணவு. முதலில் சில நாட்கள் வரை இந்த உணவு பிரியமானதா யிருக்கலாம். ஆனால், நாள் தோறும், மாதக் கணக்காகவும், வருஷக் கணக்காகவும் இதே உணவைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தால், எப்படி யிருக்கும் என்று நீங்களே நினைத்துப் பாருங்கள்.

அருவருப்பான மன நிலை நீங்கியது

இந்த அருவருப்பான மன நிலைமையை, செஞ்சிலுவை சென்ட் ஜான், போக்கிவிட்டது, எப்படி என்றால், வாரந் தோறும், ஐரோப்பாவிலுள்ள ஒவ்வொரு யுத்தக் கைதிக்கும் ஒரு பார்சல் கிடைக்கிறது. இந்தப் பார்சல்களைக் கண்ட மாத்திரத்திலே, அவற்றைத் தாம் பெற்ற மாத்திரத்திலே, அவர்களுடைய உள்ளம் எவ்வளவு மகிழ்ச்சி யடையும் என்பது பற்றி நினைத்துப் பாருங்கள். தம்மைத் தம் நாட்டவர்கள் மறந்து விடவில்லை யென்றும், தமக்காகப் போராடிக் கைதியாகி அல்லல்களுக்கு உள்ளாகியிருக்கிறார்கள் என்று நினைத்து இரங்குகின்றார்களென்றும், அவர்கள் உணரும்போது, அவர்கள் எவ்வளவு மகிழ்ச்சி யடைவார்கள்!

இந்திய செஞ்சிலுவையும் சென்ட் ஜானும் பிரிட்டிஷ் செஞ்சிலுவை சென்ட் ஜானுக்குப் பண மனுப்புகிறார்கள். அவர்களும், இந்திய வசதி நிதியாரும் உணவுப் பொருட்களை வாங்கி பார்சல் கட்டி ஜினிவாவுக்கு அனுப்புகிறார்கள். அங்கே சர்வ தேச செஞ்சிலுவை எனனும் மகத்தான தோர் ஸ்தாபன மிருக்கிறது. அவர்கள் யுத்தக் கைதிகளின் முகாம்களுக்கு அந்தப் பார்சல்களை விநியோகிக்கிறார்கள்.

இந்தியர்கள் அனைவரும், சாதி, மத, இன வேற்றுமை யில்லாமல் சாப்பிடக் கூடிய உணவுகள் தான் அந்தப் பார்சல்களில் அடக்கம் செய்யப்பட்டிருக்கின்றன. தம் சொந்த ஊர்களில் சாதாரணமாக அவர்கள் சாப்பிடும், பருப்பு, கறித் தூள், உப்பு, பழங்கள், உலர்ந்த காய்கறி வகைகள், மீன், சாக்கொலேட், சர்க்கரை முதலியவை அவற்றி லிருக்கின்றன.

ஆவலோடு எதிர்பார்க்கப்படும் பார்சல்கள்

இந்தப் பார்சல்களை அவர்கள் ஆவலோடு எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார்களென்று நமக்குத் தெரியும். எப்படி என்றால், இது பற்றி நம்மைப் பாராட்டி நமக்கு நன்றி கூறி, பல கடிதங்கள் நமக்கு எழுதி யிருக்கிறார்கள். செஞ்சிலுவையும் சென்ட் ஜானும் இந்தப் பார்சல்களை அனுப்பாதிருந்தால், நம்மவர்களான யுத்தக் கைதிகளில் அநேகர் இறந்து போயிருப்பார்கள் என்று நமக்குத் தெரியும்.

ஆனால், தொடர்ச்சியாக நாம் பார்சல்கள் அனுப்பிக் கொண்டிருக்க முடியுமா?

அனுப்பத் தான் வேண்டும். பொது ஜனங்கள் தாராளமாக உதவுவார்களானால் அனுப்ப முடியும். ஒவ்வொரு பார்சலும் ரூ. 7-8-0 அடக்கமாகிறது. வாரந் தோறும் இதன் பொருட்டு $1\frac{1}{2}$ லட்சம் ரூபாய் செலவாகிறது. அதாவது ஐரோப்பாவிலுள்ள நம் யுத்தக் கைதிகளின் உணவுப் பார்சல்களுக்கு மட்டும், இவ்வளவு செலவாகிறது.

உணவுப் பார்சல்கள் மட்டுமன்றி, ஆறு மாதங்களுக் கொரு முறை துணி பார்சல்களும் அனுப்பப்படுகின்றன. அத்துடன் சீப்பு, கண்ணாடி, சோப் முதலிய முக்கியமான பொருட்களும் அடக்கம் செய்யப்பட்டிருக்கின்றன.

இன்பமாகப் பொழுது போக்குவதற்கும், கல்வி யறிவைப் பெருக்கிக் கொள்ளுவதற்கும் பயன்படக் கூடிய புத்தகங்கள், விளையாட்டுப் பொருட்கள், இசைக் கருவிகள் முதலியவை சிறை முகாம்களுக்கு அனுப்பப்படுகின்றன. யுத்தக் கைதிகளில் அநேகர் சிறையிலேயேபடித்து பரீட்சைகளில் தேறி யிருக்கிறார்கள்.

விசேஷ காலத்தில் மிட்டாய் சப்ளை

இந்தப் பார்சல்களெல்லாம் நம் கைதிகளுக்கு இனமாக அனுப்பப்பட்டவை. கிருஸ்மஸ் காலத்தில் இந்தியாவிலுள்ளவர்களும், இங்கிலாந்திலுள்ள ஒவ்வொருவரும் தம் நண்பர்களுக்கு இனம் பொருட்கள் அனுப்புகிறார்கள். கைதிகளாயிருக்கும் நம் நண்பர்களுக்கு விசேஷ மிட்டாய் வகைகள் அனுப்பப்படுகின்றன. அப்போது தான், நாம், விசேஷ காலங்களிலும் அவர்களை மறந்து விடவில்லையென்று, அவர்கள் நினைப்பார்கள்.

தூரக் கிழக்கு நாடுகளில் கைதிகளா யிருக்கும் நம்மவர்களுக்கு இது போலவே அனுப்ப நம்மால் முடியவில்லை. ஜப்பானியர்கள் நமக்கு உதவ மாட்டார்கள். சர்வதேச செஞ்சிலுவைக் காரர்களின் பிரதிநிதிகள், கைதிகள் முகாம்களுக்குப் போவதை அவர்கள் விரும்பவில்லை. சிற்சில முகாம்களுக்கு மட்டும் போக அனுமதிக்கிறார்கள். அவர்கள், கைதிகளின் ஜாபிதாவைக் கூட நமக்கு அனுப்புவதில்லை. கைதிகளான நம்மவர்களில் அநேகர் எங்கிருக்கிறார்களென்றே நாம் தெரிந்து கொள்ளக் கூடவில்லை. என்றாலும், நம்மால் இயன்றதை நாம் செய்து கொண்டுதானிருக்கிறோம். கூடுமானவரை அடிக்கடி, உணவு, துணி, மருத்துவப் பொருட்கள் முதலியவற்றை மொத்தமாக அனுப்பிக் கொண்டிருக்கிறோம். இவற்றில் சில, போய்ச் சேர்ந்து விட்டனவென்று நமக்குத் தெரியும். அந்தப் பொருட்களும் விநியோகம் செய்யப்பட்டு விட்டன. இன்னும் மேன் மேலும் உதவி செய்ய முயற்சி செய்து கொண்டிருப்போமாக! இதற்கு உங்கள் உதவி வேண்டும்.

இந்தப் பார்சல்களுக்கும், அவற்றைக் கப்பலேற்றி யனுப்பவும் பெருந் தொகை செலவாகிறது. நாட் செல்லச் செல்ல மேலும் அதிகத் தொகைத் தேவைப் படும். பொது மக்கள் தாமாகவே கொடுத்துதவும் தொகைகளைக் கொண்டே தான் செஞ்சிலுவையும் சென்ட் ஜானும் நடை பெறுகின்றன. ஆகவே, உங்கள் வீடுகளில் சௌகரியமாக உட்கார்ந்து கொண்டிருக்கும் போதும், நல்ல உணவை உங்கள் மனம்போல் உண்ணும் போதும், உங்கள் இஷ்டம் போலப் போய் வந்து கொண்டிருக்கும் போதும், யுத்தக் கைதிகளாயுள்ள நம்மவர்களைப் பற்றி நினைவு கொள்ளுங்கள். தாராளமாகவும் முறைப்படியும் செஞ்சிலுவைக்கும் சென்ட் ஜானுக்கும் உதவுங்கள். எமக்கு நீங்கள் செய்யும் உதவி, அவர்களுக்குப் போய்ச் சேரும்.

ஹிட்லர் ஆடம்பரப் பேச்சு பொய்யானது

பொது உடைமைக் கொள்கை பீதி

சத்தியத்தை மீறும் அச்சு நாட்டார்

(ராவ் சாஹிப் டி. எஸ். நடராஜ பிள்ளை, பி.ஏ., பி.எல்.)

மூக்கறுபட்ட சூர்ப்பனகை மூத்தோன் முன் வந்து வீழ்ந்தாள். உன்னை இக் கோலம் செய்தவர் யார்? என்ன, 'இராம லக்குமணர்' என்றாள். 'நீ அவர்களுக்கு என்ன தீங்கு செய்தாய்' என்னலும், அழகிற் சிறந்த சீதையை உனக்காக எடுக்கப் போன போது இது விளைந்தது என்று கூறி சீதையின் அழகை யெல்லாம் எடுத்துரைத்தாள். அது முதல் காமவெறி கொண்டான் இராவணன். எப்பொழுதும் சீதையின் நினைவே அவனுக்கு மேம்பட்டது. அதனால் சீதையின் உருவம் அவன் கண் முன் நின்றது. இந்த உரு வெளித் தோற்றத்தைக் கண்டவுடன் சூர்ப்பனகையை அழைப்பித்தான். அவள் வந்தவுடன் இராவணன், 'இதோ பார் மை பொருந்திய வாள்போல் கூரிய கண்ணோடு மயிலின் சாயை கொண்டு என் முன் நிற்கும் இவள் தானோ சீதை' என்று கேட்டான். அவளோ இராமனையே நினைந்து நினைந்து வாடிய மனத்தை யுடையவள். ஆகையால் அவள் மறு மொழி கூறிய போது 'செந்தாமரைக் கண்ணும், சிவந்த வாயும், அழகிய தோளும், நீண்ட தாழ்ந்த கைகளும் உடைய இவனே, இராமன்' என்றாள். 'நான் கண்ட உருவம் பெண்; நீ காண்கிறது ஆண்; மாயையில் வல்ல நமக்கு மண்ணில் திரியும் மனிதர்களோ மாயையை விளைவிக்கின்றார்கள்' என்று கவலை கொண்டானாம்.

ஹிட்லர்-கோப்பல்ஸ் தடுமாற்றம்.

கோபல்ஸ் ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்கள் நூற்றுக் கணக்கான ஆங்கிலக் கப்பல்களை கடலுள் அமிழ்த்தி விட்டன என்று ஒவ்வொரு நாளும் ரேடியோ மூலம் பிரசாரம் செய்கிறார். இதைக் கேட்டுக் கேட்டு கப்பல் அமிழ்வதைப் பற்றிக் கனாக் காண்கிறார் ஹிட்லர். கோப்பல்ஸை அழைத்து இதோ என் கண் முன் தோன்றுகிற இவைகளெல்லாம் பிரிட்டிஷ் கப்பல்களா என்று கேட்கிறார். கோபல்ஸுக்கோ நாளும் நாளும் பெருத்தும் வலுத்தும் வரும் விமானங்களின் நினைவே குடி கொண்டிருக்கிறது. அவர் மறு மொழி கூறுவதோடு 'ஆம் இதோ ஆயிரக் கணக்காக, விண்ணில் மொய்த்து, வெடி குண்டுகளைப் பகலிலும் பெர்லின் மேலும் வீசும் இவைகள் தான் நேச தேசத்தார் விமானப்படைகள் என்பது.' இது கம்பர் காட்டிய நகைச் சுவையை ஒத்திருக்கிறது. பெர்லின் ரேடியோ கோபல்ஸால் ஏவப்பட்டு 'ஜெர்மானிய யூ போட் என்னும் நீர் மூழ்கிக் கப்பல்கள் அட்லாண்டிக் பெருங்கடலில் மட்டும் இல்லாமல், இந்தியக் கடலிலும் ஆயிரக் கணக்கான ஆங்கில, அமெரிக்கக் கப்பல்களை மூழ்த்திவிட்டன' என்று பேசுகிறது. ஆங்கிலக் கடற் படைத் தலைவர் அலெக்ஸாண்டர் சமீபத்தில் காமன்ஸ் பாராளும் மன்றத்தில் பேசிய போது கூறியதாவது: நம்முடைய கப்பல்களில் 1941-ல் 181 கப்பல்களுக்கு ஒரு கப்பல் மூழ்த்தப்பட்டது; 1942-ல் 233-க்கு ஒரு கப்பல் மூழ்த்தப்பட்டது; 1943 ஆரம்பத்தில் 334-க்கு ஒரு கப்பல் மூழ்த்தப்பட்டது. சென்ற ஆறு மாதங்களாக ஆயிரத்துக்கு ஒரு கப்பல் தான் மூழ்த்தப்பட்டிருக்கிறது, என்று சொல்லியிருக்கிறார். இதனால் ஜெர்மானிய ரேடியோவின் பேச்சு எவ்வளவு நம்பத் தகுந்தது என்று வெளியாகின்றது.

இதற்கு மாறாக, நேச தேசத்தினர் பெர்லின் மேல் பகலிலும் வெடி குண்டுகளை வீசுகிறார்கள். இந்த மாதம் 6-ந் தேதி ஒரு பெரிய அமெரிக்க விமானப் படை பெர்லினைத் தாக்கியது. ஜெர்மானிய விமானப் படையில் 125 விமானங்கள் சேதப்பட்டன. 1940-ம் ஆண்டு செப்டெம்பர் 4-ல் ஹிட்லர் எந்த ஆங்கில விமானமும், ஜெர்மனிக்கு அணித்தாக உள்ள வட கடலைப் பட்டப் பகலில் தாண்ட முடியாது என்று கூறிய ஆடம்பரப் பேச்சு, பொய்யாகியது. கோபல்ஸ் இதைத் தான் இப்போது கண்ணாறக் காண்கிறார்.

"வெளியில் சொன்னால் வெட்கக் கேடு."

"வெளியில் சொன்னால் வெட்கக் கேடு" என்பது ஒரு பழமொழி. இதை நாம் அடிக்கடி கையாளுகிறோம். நாஜியர் ருஷ்ய நாட்டில் அடையும் தோல்வியைப் பற்றி, இது வரை ஒன்றும் கூறாமல் இருந்தார்கள். ஆனால் எத்தனை நாட்களுக்கு இதை மறைத்து வைக்க முடியும்? அடிபட்டு முடமானவரும், கை போனவருமாகப் பல்லாயிரவர் (ஜெர்மானியர்) ருஷ்யன் போர் முனையில் இருந்து வந்து நிறைகிறார்கள். ஆகையால் இப்போது வெட்கந் துறந்து பேச ஆரம்பித்திருக்கிறார்கள் ஜெர்மானியர். இதற்குக் காரணங்கள் மூன்று. (1) ஜெர்மானியர் இன்னும் அதிகமான போர் முயற்சிகளைச் செய்வார் என்பது ஒன்று. இதனால் ருஷ்யா வெற்றி அடைந்தால் இது வரை கொடுமையாக நடந்து கொண்ட ஜெர்மானியரின் நிலை என்னவாகும் என்பதை வற்புறுத்துகிறார்கள். ஏற்கெனவே, கொடுமைக்காரர்களையும், வண்டியில் விஷக் காற்றை அடைத்து ருஷ்யரை அதில் ஏற்றிக் கொன்றவர்களையும் ருஷ்யர்கள் தங்கள் நீதி மன்றத்தில் விசாரணை செய்து அவர்களுக்குத் தண்டனை யில்லாமல் மீளுவது அரிதென்கிறார்கள். இரண்டாவதாக திடீரென்று இப்போது ஜெர்மானியர் இருக்கும் இடத்தை விட்டு பின்னடைந்தாலும் நாங்கள் முன்னமேயே சொன்னோமே என்று சொல்வதற்கும் இது இடந்தரும். மூன்றாவதாக இந்தப் பெரிய தோல்வியை மறைத்து வைக்க முடியாமலிருப்பது, உள் நாட்டாரோடு இவ்வாறு பேசி, வெளி நாடுகளுக்குப் பெர்லின் ரேடியோ பேசுவதெல்லாம் ருஷ்யரால் உண்டாகப் போகும் பெருந் தீங்கைப் பற்றித் தான். 'ருஷ்யர் ஆசியாக் கண்டத்தவர்; உண்மையில் ஐரோப்பாவைச் சேர்ந்தவரல்லர். அவர்களுடைய பொது வுடைமைக் கொள்கைகள் எங்கும் பரவினால் உலகத்தின் நிலைமை யென்னவாகும்?' என்று கேட்கிறார்கள். ருஷ்யர்கள் மடிவதைப் பாருங்கள். லக்ஷக் கணக்காக மாள்கின்றார்கள். அவர்கள் ஜனத் தொகை இதே போல் மாண்டு கொண்டு போனால், எத்தனை நாட்களுக்கு அவர்களுடைய போர் வீரர் தொகை நிலை நிற்கும். மேலும் எங்களுக்கு ஒரு புதிய முறைப் பாதுகாவல் இருக்கின்றது என்கிறார்கள். இதனால் உலகத்தார் இன்னுமோர் முறை சமாதானத்துக்கு வருவார்கள் என்று எதிர் பார்க்கிறார் ஹிட்லர். ஆனால் 18-10-42-ல் கோபல்ஸ் வெறும் விருதுக்குப் பாடுபடாமல், நிலக்கரிக்கும், இரும்புக்கும் எண்ணெய்களுக்கும் கோதுமைக்கும் போர் புரிகின்றோம் என்றதை எப்படி மறக்க முடியும்.

ருஷ்ய வெற்றி பற்றி ஜப்பான் அச்சம்.

ருஷ்ய வெற்றியைக் கண்டு ஜப்பானியரும் அச்சங் கொண்டிருப்பது வெளிப்படையாகிறது. உலகத்தில் ஜெர்மனியாரை விடச் சிறந் போர் வீரர் இல்லை என்று நாம் எண்ணினோம். ஆனால் ருஷ்யர் போர்த் திறத்தைக் கண்ட உலகத்தார் வியந்து நிற்கிறார்கள். சென்ற ருஷ்யச் சண்டையில் அவர்களை எளிதில் முறியடித்த ஜப்பானியருக்கு, இது பெரும் கலவரத்தை விளைவிப்பது இயற்கையே. அதனால் அவர்கள் படேவியா ரேடியோவில் ஆங்கிலத்திலும், சைகான் ரேடியோவில் தமிழிலும் சொல்லுவது, ருஷ்யர்கள், உடன்படிக்கைகளைக் கிழிந்த காகிதமாக எண்ணுகிறவர். ருஷ்யர்களுக்கும் ஆங்கில அமெரிக்கர்களுக்கும் இப்போது நல்லுறவு இல்லை என்கிறது. நல்லுறவு இல்லாவிட்டால் இத்தாலிய கப்பற் படையில் மூன்றில் ஒரு பங்கை ருஷ்யாவுக்கு நேச தேசத்தார் அளிப்பார்களா? அச்சு நாட்டார் தான் சத்தியத்தை மீறி நடக்கிறவர்கள் என்பது உலகறிந்த விஷயம்.

1939-ல் ஜெர்மனி ருஷ்யாவோடு சமாதான உடன்படிக்கை செய்து கொண்டது; 1941 ஜூன் 22-ல் ருஷ்யாவின் மீது யாதொரு காரணமுமின்றிப் பாய்ந்தது. ஆஸ்டிரியாவில் உள் நாட்டு விஷயத்தில் நுழைவதில்லை என்று ஹிட்லர் பேசிய 19-ம் நாள், ஆஸ்திரியாவின் மீது படையெடுத்தார். அவர், ஹாலந்தின் தனி உரிமைகளைக் காப்பாற்றுவதாகச் சொன்ன மறு நாளே, அதைக் கொள்ளையிட்டார். பெல்ஜியத்தை வென்றதும் இதே போலல்லவா?

ஏகோபித்த வளர்ச்சி முறையின் சூது.

அது அப்படி யிருக்க கீழ்த்திசையில் ஜப்பான் ஆக்ரமிப்புள்ள பிரதேசங்களிலிருந்து, உணவுப் பொருள்களை ஏகோபித்த வளர்ச்சி முறை என்ற பெயரால் டோக்கியோவுக்கு அனுப்பப் படுவதை ஆராய்வோம். 1944 பிப்ரவரி 14-ல் படாவியா ரேடியோ நிலையம் 'ஜப்பானியருடைய உணவுப் பொருள்களைப் பற்றி கவலை என்கிற பேச்சே கிடையாது. இது ஆசியாக் கண்டத்தில் இருக்கிற மற்றைய நாட்டாருடைய ஒத்துழைப்பால் ஏற்பட்டது' என்கிறது. இது 'எங்கப்பா குதிருக்குள் இல்லை' என்பதுபோ லிருக்கிறது. ஜப்பானுக்கு வெற்றியில் முன்னிருந்த நம்பிக்கை போய்விட்டது. கப்பல் சேதத்தினுல் உணவுப் பொருள்களை டோக்கியோவில் சேகரிப்பது கடினமாய்விட்டது. இதனுல் தான் உணவுப் பொருள்களைப் பற்றிப் பேச வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. இது வரை ஜாவாவில் ஏராளமான உணவுகள் இருக்கின்றன என்று சொன்னவர்கள், இது வரை மஞ்சூரியாவைப் பற்றி ஒரு பேச்சும் பேசாதவர்கள், இப்போது மஞ்சூரியா தங்களது நிறைந்த, குறைவு படாத களஞ்சியம் என்று சொல்லும்படி நேரிட்டதேன்? மேலும் அவர்களுடைய வாயாலேயே 'கிழக்கு ஆசிய ஏகோபித்த வளர்ச்சி முறை' என்பது ஜப்பானுடைய கொள்ளை கொள்ளும் வன்மை என்று தெரியப்படுத்துகிருர்கள்.

டோக்கியோ உளறிய உண்மைகள்.

மேலே சொன்னபடி படேவியா ரேடியோ பேசின அந்நாளிலேயே டோக்கியோ ரேடியோ சில உண்மைகளை உளறிவிட்டது. 'உணவுப் பண்டங்களும் மற்றைய தானிய வகைகளும் மலேயாவில் முன்னைவிட அதிகமாக உண்டாக்கப்படுகின்றன. இவைகள் ஜப்பானுக்கு அனுப்பப்படுகின்றன' என்றது. ஆகவே பிறர் இன்புற்றிருக்க நினைப்பதெல்லாம், தான் இன்புறவே என்பது வெளியாகிறது. இன்னும் கேளுங்கள். பிற நாடுகளிலிருந்து ஜப்பானுக்கு அரிசி ஏற்றுமதி உடன்படிக்கை முடிந்தவுடன், மற்றைய பண்டங்களின் உடன்படிக்கைகளும் இவ்வருடம் நிறை வேற்றப்படும் என்று பிப்ரவரி 3-ந் தேதி டோக்கியோ ரேடியோ நிலையம் பேசியது. இந்தோ-சைனுவின் கூட்டுறவால் உண்டாகிய நன்மையைப் பாருங்கள்! அரிசி விளையும் நாடு இந்திய நாடு. அரிசியையே முக்கிய உணவாகக் கொள்ளும்

(11-ம் பக்கம் பார்க்க)

பிரயாணக் குறைப்பும் தேசீய சேமிப்பும்

(மிஸ்டர் எம். ஐயாசாமி.)

பாட்டு.

தர்க்கம்.

(எல்லைப் பிடாரிக்கு என்ற மெட்டு.)

மனைவி—சித்திரை மாசத்திலே சேரும் நிலாக் காலத்திலே
தேருப் பார்க்க மதுரைக்குத்தான் போகணும்—அதுக்கு
சேலை வாங்கி நகைகள் பண்ணி யாகணும்—அந்த
ஊருச்சாமி கிருபையைத் தான் கோரணும்—மச்சான்
உனக்கும் எனக்கும் இருக்கும் குறைகள் தீரணும்.

புருஷன்—பொல்லாத யுத்தம் வந்து சள்ளையாய்ப் போச்சுதடி
புகைவண்டி சவுரியந்தான் இல்லையே—அங்கே
போவதுன்னு நமக்குப் பெரிய தொல்லையே
நகை செய்யத் தங்கம் கிராக்கி யாச்சுதே—இப்போ
நாலு மடங்கு விலையும் ஏறிப்போச்சுதே.

வசனம்.

மனைவி—இந்தா பாரு! எ மச்சான்! இந்த வருஷம் போவோம் வாற வருஷம் போவோம்னு வருஷமெல்லாம் ஏமாத்திக்கிட்டு வர்றே பாரு, அதெல்லாம் இப் போப் பலிக்காது. இந்த வருஷம் எப்படியும் சித்திரைத் திருவிழாவுக்குப் போகல்லியோ, அப்புறம் நான் பொல்லாதவளா இருப்பேன் பாத்துக்கோ!

புருஷன்—போடி பயித்தியக்காரி! யுத்த காலத்திலே ரயில் வண்டிப் போக்கு வரத்தெல்லாம் ஒரே மட்டமாய்க் குறைஞ்சு போயிடுச்சு. எப்போப் பார்த்தாலும் ரயிலிலே ஏகப்பட்ட நெருக்கடியாயிருக்கு. ஏறி யிறங்கிறதுக் குள்ளே என்னையும் உன்னையும் கஞ்சியாக்கிப் போடுவான்களே ஊருப் பசங்க! திருவிழாவுக்குப் போறதுக்கு இதுதானு காலம்?

மனைவி—அப்போ ஊருலே நாட்டிலே இருக்கிறவங்க போகாமே வராமலா இருக்குருங்கோ?

பாட்டு.

சாக்குப் போக்குச் சொல்லியேதான் சமத்துப் பேச்சுப் பேசியேதான்
ஏய்க்கிற உன் வழக்கமெல்லாம் விட்டுடு—அங்கே
எப்படியும் போகணும்புறப் பட்டுடு
ஏமாத்தி வருஷமெல்லாங் கடத்துறே—நீயும்
என்னமோ தான் எண்ணி யென்னை நடத்துறே.

வசனம்.

என்னைத் தானே ஏமாத்தப் பார்க்கிறியே மச்சான்!

பாட்டு.

புருஷன்—ஏமாத்து ஏதுமில்லை சாமார்த்தியப் பேச்சுமில்லை
சேமத்தை நாடியே தான் சொல்லுறேன்—அதனுல்
தீமையி ருக்குதெனத் தள்ளுறேன்
தேவையில்லாப் பிரயாணம் தவிர்க்கணும்—இந்த
தேசத்திடர் தவிர்ந்து சுகிக்கணும்.

வசனம்.

ஒரு ஆத்திரம் அவசரம்ன்னுப் போக வேண்டியது தான். அனுவசியமாய் ரயில் பிரயாணம் பண்றதுக்கு இதுகால மில்லடீ. ஊரிலே இருக்கிறவங்க தெரியாத்தனமாய்ப் போனு! அதுக்காக நாமும் போறதா? யுத்த காலத்திலே ஜனங்கள் பிரயாணம் பண்றது அவ்வளவு முக்கியமில்லடீ. யுத்த களத்திலே உயிரைக் குடுக்கத் துணிஞ்சு, அக்கம் பக்கத்திலே இருந்து போயிருக்ருங்களே சிப்பாய்ங்களா, அவுங்களுக்கு, திடீரென்று சாமான் சட்டு முட்டுக்கொண்டு போக வேண்டியதா வந்துடும்; ஒத்தாசைக்கு ஆளனுப்ப வேண்டியதா வந்துடும். அதுக்காக வண்டிகளெல்லாம் எந்த நேரத்திலும் தயாராய் இருக்க வேண்டிதாயிருக்கு. போதாக் குறைக்கு ரயில் கரின்னு சொல்ருங்கோ பாரு நிலக்கரி, அதுக்கு வேறே பஞ்சமாப் போயிடுச்சு. அப்படியிருக்க, சிப்பாய்ங்களுக்கு உதவியனுப்புறது முக்கியமா? நம்ம திருவிழாப் பார்க்கிறது முக்கியமாடீ? ஒரு பேச்சுக்குச் சொல்றேன். உதவியனுப்ப முடியாததுனலே, நம்மளவுங்க கைதணிஞ்சு, எதிரிங்க கைமேலே போயிடுச்சுன்னு வச்சுக்கோ! அப்போ என்ன ஆகும்ங்கிறேன்? திருவிழா வெல்லாம் வெறு விழாவாப் போயிடுமாக்கும். அதுக்குத்தான் சொல்றேன், யுத்தம் முடியுறவரைக்கும், திருவிழாக் கிருவிழா ஒண்ணும் மூச்சுக்காட்டாதே. யுத்தம் முடியட்டும். நம்மளவுங்க ஜெயிக்கட்டும். வருஷா வருஷம் பார்த்துக் கோயேன் திருவிழாவை!

மனைவி—ஆமா! இப்படித்தான் என்னத்தை யாச்சும் சொல்லி ஒவ்வொரு வருஷமும் ஏமாத்துறே.

அவர்கள் ஜெயிக்க, இவர்கள் தோற்பதேன் ?

ஒரு வருஷத்திற்குள் 900 மைல்கள் துரத்தி யடித்திருக்கிறார்கள்; இன்னும் துரத்திக் கொண்டே யிருக்கிறார்கள். தெற்கு ருஷ்யாவை விட்டு ஜெர்மானியரை ருஷ்யர்கள் பூரணமாகத் துரத்திவிட்டார்கள். பெஸரேபியா என்ற சிறு நாட்டிற்குள் செஞ்சேனை புகுந்து விட்டது. அங்குள்ள முக்யமான தொரு ரயில்வே ஜங்ஷன் பிடிபட்டுவிட்டது. ருமேனிய எல்லை இன்னும் வெகு தூரத்திலில்லை. ஜெர்மன் படைகள் அலங்கோலமாகச் சீர்குலைந்து பின் வாங்கி ஓடுகின்றன. வடக்கே, இன்னொரு செம்படை நாஸிகளைத் துரத்திய வண்ணமே இருக்கின்றது. அப்படையின் பார்வையிலே, காரப்பேதியன் மலைச் சிகரங்கள் தென்பட ஆரம்பித்து விட்டன. செஞ்சேனைகள் முன்னேறும் வேகத்தைப் பார்த்து, உலகமே பிரமிக்கிறது. மூன்று வருடங்களுக்கு முன் அட்டகாசம் செய்துகொண்டிருந்த நாஸிப் படைகள், அடிபட்ட நாய், தனது வாலை பின்னங்கால்களுக் கிடையில் அமுக்கிக் கொண்டு ஓட்டம் பிடிப்பது போல் ஓடிக்கொண்டிருக்கின்றன. ஹிட்லர் அவமானம் தாளாது, வாய் திறவா திருக்கிறார். அவரது வயிற்றிலே உண்மையாகவே புளியைக் கரைத்துவிட்டது போல் தானிருக்கும்.

இந்த கதி ஏற்பட்டதேன் ?

உலகையே வெல்லப் புறப்பட்ட ஜெர்மன் சேனைக்கு இத்தகைய கதி ஏற்பட்டதேன்? முதலிலே ஏகமாக, ஆட்களையும், பிரதேசங்களையும் இழந்த ருஷ்யா இன்று உலகோரின் பாராட்டுதல்களைப் பெற்று, வெற்றி மாலைகளைத் தொடர்ந்து சூடிய வண்ணமே இருப்பதேன்?

ஜெர்மனிக்கு இக்கதி ஏற்பட்டு வருவதற்குப் பல காரணங்களுண்டு. ஒன்று, ஹிட்லர் தொடங்கிய இந்தப் போர் மகா அக்ரமமான போர். சும்மா இருந்த உலகை சுட்டெரித்து, தனதாக்கிக் கொள்ளப் பார்க்கும் ஒருவனை தனதிஷ்டப்படி நடக்க உலகோர் விட்டு விடுவார்களா? ஹிட்லர் செய்வது அயோக்யத்தனமான காரியம் என்ற அபிப்பிராயம் கொண்டவர்களே இந்த உலகிலே அதிகமாக இருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்துவிட்டார்கள். ஹிட்லருக்கு சகாவாக, ஒரு உதவாக்கரை முஸோலினியும், தலை கனத்த டோஜோவும் தான் அகப்பட்டார்கள். இவ்வளவு பெரிய உலகிலே இரண்டே இரண்டு பேர்கள் ஒருவருக்கு தாமாக சகாவாக ஆனார்கள்; மற்றவர்கள் எல்லாம் எதிர்க்கட்சி; அவர்களில் சிலரைப் பலாத்காரப் படுத்தி, தனது கட்சிக்கு இழுத்துக் கொள்ள வேண்டி வந்தது ஹிட்லருக்கு என்றால், இதிலிருந்தே ஹிட்லரின் கட்சி எவ்வளவு மோசமானது என்று தெரியவில்லையா?

புருஷன்—நான் என்னடி பண்ணட்டும்? உன்னையும் கலியாணம் பண்ணிக்கிட்டு வந்தேன். யுத்தமும் பின்னாலேயே வந்துடுச்சு.

மனைவி—அப்போ அது கிடக்கட்டும்.

பாட்டு.

கழுத்துக்குச் சங்கிலியும் காதுக்கொரு லோலக்கும்
கைக்குரெண்டு வளையல்வேணும் செஞ்சுதா—இன்னும்
கால் சதங்கைக் கொலுசும் வேணும் தெரிஞ்சுதா
காசுபணம் இல்லையென்னு சொல்லாதே—எனக்கு
கடுத்த கோபம் வந்துவிடும் பொல்லாதே.

புருஷன்—காசு பணத்தைப்பற்றிக் கவலையேது மில்லையடி
கையிலே பணம் நிறைய இருக்குது—ஆனால்
கடையில் தங்கவிலையோ ரொம்ப நெருக்குது—நகை
செய்ய வேண்டாம் சொல்லுறதைக் கேளடி—பணத்தைச்
சேர்த்து வைத்தால் வருதுநல்ல நாளடி.

வசனம்.

மனைவி—ஊங்! வந்துட்டே பாரு உன் வழக்கத்தைக் காட்டுறதுக்கு?

புருஷன்—ஏண்டி! நீ தான் சொல்லேன்! பவுன் முந்தி என்ன விலைக்கு வித்துச்சு?

மனைவி—பதிமூணரை ரூபாய்க்கு.

புருஷன்—இப்போ என்ன விலை?

மனைவி—அம்பதுக்கு மேலேன்னு சொல்றுங்கோ.

புருஷன்—அம்பத்து நாலு அம்பத்தி அஞ்சுன்னு விற்குது.

மனைவி—ஊ-ங்.

புருஷன்—முந்தி நாலு பவுன் வாங்கின விலை, இப்போ ஒரு பவுனிலே போடவேண்டியதாயிருக்கு. எதனாலேடீ இப்படி அதிக விலை?

மனைவி—பாழாய்ப் போன சண்டை வந்ததினாலே தான்னு சொல்றுங்கோ.

புருஷன்—ஊ-ங்......சண்டை வந்ததினாலே தானே.

மனைவி—ஆமா.

புருஷன்—அப்போ, சண்டை முடிஞ்சு போச்சுன்னா, மறுபடியும் பழைய விலைக்கு வந்துடுமில்ல?

மனைவி—அதுக்காக இப்போ நகை போடவேணா மிங்கிறியா?

புருஷன்—சொல்றதைக் கேளடீ. இப்போ ஒரு பவுன் வாங்குறோம். திடீர்னு சண்டை முடிஞ்சு சீக்கிரம் விலையிறங்கிப் போச்சுன்னா, நமக்கு எவ்வளவு நஷ்டம்? மூணு பவுன் வாங்குற பணம் நஷ்டம். இப்போ நகை செய்யாமே அந்தப் பணத்தை அப்படியே வச்சிருந்து சண்டை முடிஞ்ச பிறகு நகை செய்தா, இப்போ ஒரு பவுன் வாங்குகிற அம்பத்தி நாலு ரூபாய்க்கு, அப்போ நாலு பவுனே அஞ்சு பவுனோ வாங்கலாமே!

மனைவி—போதும் போதும் புராணப் பிரசங்கம். எனக்கு நகை தான் செய்யணும். நகை செய்து போட்டாலும் ஒரு உருப்படியாக வாச்சும் கிடக்கும். சண்டை முடியுற வரைக்கும் இந்தப் பணத்தை அப்படியே வச்சிருக்கப் போறியோ?

புருஷன்—அப்படியா நினைக்கிறே?

கண்ணனெந்தன் காதலன் தானே என்ற மெட்டு.

பாட்டு.

புருஷன்—அதுக்கொருமார்க்கமுந்தானே—இப்போ நான்
அமைக்கப்பட்டிருக்குது மானே—தெரியுமா

மனைவி—எதுக்கிந்த புரட்சி வார்த்தைகள்—சொல்லியே
ஏமாற்ற நினைக்கின்றீரிந்த—மெல்லியை

புருஷன்—திருட்டில்லே கபடில்லே தானே—தேசீய
சேமிப்புத் திட்டமது தானே—தெரிஞ்சுக்கோ

மனைவி—இருக்கட்டும் அதிலென்ன நன்மை—உண்டுமே
இயம்புவீர் எனக்கதனுண்மை—விண்டுமே

புருஷன்—பத்து ரூபாய் தான் ஓர் பத்திரம்—வாங்கினால்
பன்னிரண்டு ஆண்டுக்கப்புறம்—மாற்றலாம்

மனைவி—உற்றதொரு லாபமென்னவோ—அதனால்
உண்டெனக்கு விளங்கக் கூறுவீர்—இது நான்

வசனம்.

புருஷன்—அப்படிக்கேளு! பத்து ரூபாய்க்கு ஒரு பத்திரம் வாங்கினால், பனிரெண்டாவது வருஷம் அஞ்சு ரூபாய் வட்டி சேர்த்துக் கொடுக்கிறாங்கடி. இப்போ

ஒரு பவுன் வாங்குறோமே. அம்பத்திநாலு ரூபாய், அதிலே நாலு ரூபாய் எடுத்து, 'ஸ்டாண்டர்டு கிளாத்து'ன்னு வந்திருக்கு பாரு அதிலே ஒரு சேலை வாங்கிக்கிட்டு பாக்கி அம்பது ரூபாய்க்கு அச்சு சேமிப்புப் பத்திரங்கள் வாங்கி வச்சிட்டோம்னு, இன்னும் பத்து அல்லது பனிரெண்டு வருஷம் கழிச்சு என்ன ஆகும் தெரியும்மா? இப்போ ஒரு மனிதன் வாங்கிற அந்த ரூபாய்க்குள்ளே, அப்போ அஞ்சு பவுனும் வாங்கி அதுக்குள்ளே நகை செய்யிற கூலியும் கூடக் கொடுத்துக்கிடலாண்டீ, இந்தா பாரு! என்டேரிலே உனக்கு நம்பிக்கை யில்லையாக்கும்; உன்பேராலேயே பத்துப் பத்திரங்கள் வாங்கி வட்சுடலாம். பவுன் விலை இறங்கின உடனே, நீயே வாங்கி நீயே நகை செய்துக்கோயேன்.

மனைவி—ஆமா மச்சான்! பத்திரம்ன்னுக் காயிதந் தானே

புருஷன்—ஆமா.

மனைவி—நல்ல வேளையாப் போச்சு. காசைக் குடுத்துக் காயிதத்தை வாங்கிப் பூசை பண்ணிக்கிட்டு இருக்கச் சொல்றியா?

புருஷன்—உன் புத்தியிருக்கே, உலக்கைக் கொழுந்துதாண்டீ. எண்டீ! இப்போ நம்மிடத்திலே புழங்குகிற ரூபாய் நோட்டெல்லாம் இருக்கே, அதெல்லாம் தங்கத்திலே இழுத்த தகடுன்னு நினைச்சுக்கிட்டிருக்கிறியா? போடி பயித்தியக்காரி! இதுவும் காயிதந்தான் அதுவுங் காயிதந்தான். இதிலென்னடி வித்தியாசம்? இந்தப் பத்து ரூபாய் காயிதத்தைக் கடையிலே குடுத்தா, பத்துச் சின்னக் காயிதத்தை உடனே குடுத்துடுறான். அந்தக் காயிதத்திற்கு மூணு வருஷத்திற்கப்புறந்தான் பணம் கிடைக்கும். அதுக்குத்தான் வட்டி வேறே குட்டி போட்டுக்கிட்டிருக்குதே! பன்னிரெண்டு வருஷங் கழிச்சு மாத்தினால் பத்துக்குப் பதினஞ்சு வெள்ளி ரூபாயாய்க் கிடைக்கும்; தங்கப் பவுனுக் கூடக் கிடைச்சுடுண்டீ!

மனைவி—அது சரி தான் மச்சான்! சண்டையிலே நம்ம ராசா தோத்துப் போயிட்டாருன்னு, இந்தப் பணம் ஒண்ணுமில்லாமற் போயிடுமாமே?

புருஷன்—ஆமா! இந்தப்பணம் மட்டும் ஒண்ணுமில்லாமேப் போயிடும்! மற்ற ரூபாய் நோட்டுகளெல்லாம் இருக்கு பாரு, அதெல்லாம் குஞ்சு பொறிச்சுக்கிட்டிருக்கும். போடீ அசடே! அதிருக்கட்டும்! சண்டையிலே தோத்துப் போவோம்ன்னு வச்சு இப்போ எண்டீ பேசணும்? இது எப்படியிருக்கு தெரியுமோ? கன்னிப் பெண்ணு இருக்கிற ஒருத்தி, தனக்குக் கல்யாணம் முடிஞ்சு, பிள்ளையும் பெத்து, செல்லமா வளத்து வரும்போது, அது திடீர்ன்னு செத்துப் போயிடுச்சுன்னு என்ன பண்றதுன்னு நினைச்சாளாம். தன்னை அறியாமே அழுகை வந்திடுச்சாம். உக்காந்து ஒப்பாரி வச்சு அழ ஆரம்பிச்சுட்டாளாம். அந்தக் கதைமாதிரி இருக்குடீ நீ சொல்றது! நம்ம தோத்துப் போவோம்ன்னு எவண்டீ சொன்னவன்? ஆப்பிரிக்காவை ஜெயிச்சு, சிசிலித்தீவையும் பிடிச்சு, இத்தாலிக்குள்ளேயும் நுழைஞ்சு ஜாம் ஜாம்ன்னு சக்கைப்போடு போடுது அமெரிக்க அஞ்சாம் பட்டாளமும் பிரிட்டீஷ் எட்டாம் சேனையும். நம்ம நேச நாட்டாராகிய ரஷ்யக்காரர்களோ, ரஷ்யாவிலே எதிரிகளுக்குச் சரியான உதை கொடுத்துத் துரத்து துரத்துன்னு துரத்திக்கிட்டு இருக்றுங்கோ. பசிபிக் சமுத்ரம்ன்னு சொல்றுங்களே, அங்கே பாத்தா, அமெரிக்கப் படைகள் சமயம் வந்தபோதெல்லாம் ஜப்பான்காரருக்குச் சரியான சாப்பாடு கொடுத்து, ஒவ்வொரு தீவாத் திருப்பிப் பிடிச்சுக்கிட்டு வர்றுங்கோ. போதாக் குறைக்கு அமெரிக்க விமானப் படையும் ஆங்கில விமானப் படையும் சேர்ந்து ஜெர்மனியிலே உள்ள தொழிற்சாலைப் பிரதேசங்களையெல்லாம் நொறுக்கு நொறுக்குன்னு நொறுக்கித் தள்ளுதுங்க. இத்தனையும் போதாமே, பர்மாவிலே வேறே படையெடுத்து எதிரியோடே குஸ்தி போட்டுக்கொண்டிருக்குது நம் பட்டாளங்கள். இதையெல்லாம் பார்த்துத் தான் எதிரிகளுக்கு அந்திய காலம் வெகு சீக்கிரம் வந்துடுச்சுன்னு உலகமெல்லாம் சொல்லுது. அப்படியிருக்க நாமாவது தோற்பதாவது!

(முதல் பாட்டு எடுப்பு.)

புருஷன்—வெற்றி வெகு சீக்கிரமாய்க் கிட்டிவரப் போகுதடி
அட்டியேதுமில்லாமலே இறுதியாய்—நமக்கு
வட்டியோடு முதலும் வரும் உறுதியாய்—அப்போ
கெட்டி நகை போட்டழகு பார்க்கலர்ம்—இப்போ
செட்டுப் பண்ணிப் பணத்தையெல்லாம் சேர்க்கலாம்.

மனைவி—மச்சான் உன் சொல்லைக் கேட்டு உச்சு குளிர்ந்து போச்சு
நிச்சயம் நீ சொன்னபடி கேட்கிறேன்--நானும்
மிச்சம் பண்ணிப் பணத்தை யெல்லாம் சேர்க்கிறேன்—
இர்சை கொண்டேன் பத்திரங்கள் வாங்கவே—வெற்றி
'எய்தியே நம் நாட்டிலின்பம் ஓங்கவே.

தீக்கொளுத்தும் ராஜாவுக்குப் பந்தங் கொளுத்தும் மந்திரி

தீக் கொளுத்தி ராஜாவுக்கு பந்தம் கொளுத்துகிற மந்திரி போலமைந்தார் முஸோலினி. அவருக்குச் சுயமாக சக்தி அதிகமில்லை. அவர் செய்யத் துணிந்த காரியத்திற்கு உள்ளூரார் ஆதரவுமில்லை. ஆகவே உள்ளூரார், தக்க சமயம் பார்த்து அவரைக் காலைவாரி விட்டுவிட்டார்கள். அவருக்கும் பந்தம் கொளுத்திக் கொடுத்ததில் கை சுட்டுவிட்டது. ஹிட்லராகப் பார்த்து அவரைக் காப்பாற்றி, ஒரு பொம்மையாக தன்னருகே வைத்துக் கொண்டிருக்கிறார். ஆளில்லாத தொரு நாட்டுக்கும், பிரதேசமில்லாத தொரு தேசத்துக்கும் நொண்டிக் கிழ முஸோலினி தலைவராக இருக்கிறார். உலகோர் பார்த்துக் கைதட்டிச் சிரிக்கும் படியான அந்தஸ்துடன் விளங்குகிறார் அவர்.

ஜப்பானுக்கு மகோதர நோய்

ஹிட்லருடன் சிநேகமான டோஜோ இருக்கிறாரே, அவரது கையிலே சிக்கிய ஜப்பானிய சாம்ராஜ்யம் முதலில் கொஞ்சம் உருவில் உப்பிற்று. ஆனால் அது ஆரோக்யமாக ஏற்பட்ட பருமனல்ல; மகோதர வியாதியில் சிக்கியவன் வயிறு உப்புவதைப் போல் தான் என்பது சீக்கிரமே தெரிந்துவிட்டது. உலகிலே இப்படிப்பட்ட ஒரு வியாதியுடன் ஒரு நாடு இருக்கப்படாது என்று நேசதேச நிபுணர்கள், ஜப்பானின் வயிற்றிலே ஏற்பட்ட வியாதியைக் குத்திக் குத்திச் சரிப்படுத்திக் கொண்டு வருகிறார்கள். இபபொழுது வயிறு உப்புதல் நின்றுவிட்டது. உள்ளேயிருக்கும் அதிகப்படியான ஜலம் வெளியில் எடுக்கப்படுகிறது. கைதேர்ந்த நிபுணர்கள் சத்ர சிகிச்சையில் இறங்கியிருப்பதால், திரும்பவும் வயிறு பருக்காது. அது வரை நிச்சயமாகச் சொல்லலாம்.

ஜப்பானியர்கள் வாலாட்ட முடியாது

ஜெர்மனியிலிருந்து வெகு தூரம் கிழக்கே வந்துவிட்டோமே? ஜப்பான் விஷயமும் கவனிக்கப்பட வேண்டிய விஷயம் தான். ஜெர்மனியை முழுக்கத் தோற்கடித்த பின் ஜப்பானைப் பூரணமாகக் கவனிப்போம் என்று பிரிட்டிஷார் கூறிக் கொண்டிருந்ததுண்டு. ஆனால் கால தேசவர்த்தமானங்கள் மாறியிருப்பதால், இப்பொழுது ஜப்பானியரையும் உடனுக்குடனே கவனிக்கத் தொடங்கியிருக்கிறார்கள். போன வாரத்தில் பிரதம மந்திரி சர்ச்சில் என்ன சொல்லியிருக்கிறார் தெரியுமா? "ஜெர்மன் வீழ்ச்சிக்கும், ஜப்பான் நொறுங்குவதற்கும் இடையிலே, நீண்ட காலம் இடைவெளி இருக்கும் என்று ஒரு வருடத்திற்குமுன் நினைத்திருந்தோம்; ஆனால் பஸிபிக் பிரதேசத்திலே, எதிர்பார்த்ததை விட அதிவேகமாக யுத்தப் போக்கு முன்னேறக் கூடும் என்று தோன்றுகிறது. ஜப்பானியக் கடற்படை பஸிபிப் பிரதேசத்திலே வாலாட்டப் பயந்து, மேற்கே ஓடி, இந்தியா அருகே உள்ள கடல்களில் தலையை நீட்டி,

கொட்டமடிக்க முயலலாம். அந்த ஆபத்தைச் சமாளிக்க, பெரியதொரு கப்பற்படையை இப்பொழுது இந்தியக் கடல்களில் வைத்திருக்கிறோம். பர்மாவிலே, ஒரு நேசதேசத்தார் சாகவோ, காயமடையவோ செய்தார் என்றால், அதற்கு ஈடாக நான்கு ஜப்பானியர்கள் யமனுலகு சேர்கிறார்கள். நமது படை பலம், விமான பலம் எல்லாம் ஜப்பானியருடையதைவிட ரொம்ப ஒஸ்தி'' என்று குறிப்பிட்டிருக்கிறார் அவர்.

வீரச் செயலா ? நரி வேலையா ?

'என்னையா எழவு இப்படியாகி விட்டதே யுத்தம்!' என்று கதிகலங்கி, எந்த நிமிஷத்தில் என்ன ஆபத்து வருமோ என்று திகில்பட்டுக் கிடக்கும் ஜப்பானிய மக்களை உத்சாகப்படுத்தும் பொருட்டு, 'இதோ பாருங்கள் பெரிய இந்தியப் படையைத் திரட்டிவிட்டோம். இதோ இந்தியா மீது படை யெடுக்கிறோம்' என்று பிரமாதமாகத் தம்பட்டம் கொட்டிக்கொண்டு, ஆள் நடமாட்டம் அதிகமில்லாத, அதிபயங்கரமான காடுகள் நிறைந்த, போக்குவரத்து சாதனங்கள் மிகக் குறைந்த மலைப் பிரதேசங்களைக் கொண்ட மணிபுரி சமஸ்தானத்திற்குள் புகுந்தனர். இது நரி வேலை, அது ஊர் எல்லையில் உள்ள குடிசைகளருகே திருட்டுத்தனமாக வந்து, கோழிக் குஞ்சுகளையும், வாத்துக்களையும், ஆட்டுக் குட்டிகளையும் தூக்கிக் கொண்டு போகுமல்லவா ? அதற்கு மேல் அதனிடம் என்ன சூரத்தனத்தைக் காண முடியும்? அதை அடிக்க ஆட்கள் புறப்பட்டால், பெரிய துப்பாக்கி, தோட்டாக்களோடா போகிறார்கள். குண்டாந் தடிகளை எடுத்து வீசினால், தரித்திரம் காலொடிபட்டு விழப்போகிறது. புலியா, சிங்கமா சாகும் வரை பயங்கரமாக எதிர்த்து நின்று போராட. ஒரு சிங்கம் கட்டவிழ்த்துக் கொண்டு, ஊருக்குள்ளே வந்துவிட்டதென்றால், ஊராரே நடுநடுங்குவார்கள். அதே, ஒரு குள்ள நரி ஊருக்குள்ளே வந்து விட்டதென்றால், யார் பயப்படுவார்கள்?

சம்பிரமமான பூசைக் காப்பு

அதே போல, ஜப்பானியர் இந்திய எல்லைக்குள் அடி எடுத்து வைத்திருக்கிறார்கள். பிரமாதமான படைகளோடு வந்து விட வில்லையாம் அவர்கள். நேசதேச ராணுவத்திற்குதவும் போக்கு வரத்துச் சாலைகளைத் துண்டித்து விட வேண்டும். இந்தியாவிலே ஒரு பீதியைக் கிளப்பி விட்டு விட வேண்டும். இத்தருணம் தப்பினால், பிறகு இந்தியாவிற்குள் புகக் கூட 'சான்ஸ்' இல்லாதபடி நிச்சயம் துரத்தப் பட்டு விடுவோம். ஆகையால் அருகிலிருக்கும் பொழுதே அடி யெடுத்து வைத்து விட்டுப் போய் விடலாம் என்று அவர்கள் மணிபுரி சமஸ்தானத்திலே புகுந்திருக்கிறாப் போலிருக்கிறது. இந்தியா மீது, இது வரை வட மேற்குக் கணவாய் வழி இறங்கித் தான் எதிரிகள் படை யெடுத்திருக்கிறார்கள். 'இந்தியா மீது கிழக்கிலிருந்தும் படை யெடுத்தார்கள் ஜப்பானியர்' என்று எதிர்கால இந்து தேச சரித்திரத்தில் குறிக்கப்படும் பெருமையை ஜப்பானியர்கள் சம்பாதித்துக் கொண்டு விட்டார்கள். அதோடு சரி அவர்கள் இங்கு பெறும் மரியாதை. சம்பரமமாகப் பூசைக் காப்பளித்து அவர்களை அனுப்ப நம்மவர்கள் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள்.

ஜப்பானிய சொறி சிரங்கு

மணிபுரி சமஸ்தானத்தின் தலை நகரான இம்பாலை நோக்கி, மூன்று திசைகளிலிருந்து ஜப்பானியப் படைகள் முன்னேறி வந்து கொண்டிருக்கின்றனவாம். டாங்கிகளைக் கூட ஜப்பானியர் கொண்டுவந்திருக்கிறார்களாம். ஆனால் நம்மவர்கள் சும்மா இல்லை, படை யெடுத்த ஜப்பானியரைப் பக்குவமாக அடித்தொழிக்க வழி செய்து கொண்டிருக்கிறார்கள். விமானப் படையினர் குண்டுகளை வீசுகிறார்கள். தரைப் படையினர் ஜப்பானிய டாங்கிகளை நாசப்படுத்துகிறார்கள். இது ஒன்றும் பிரமாதமில்லை. இப்பொழுது ஊரிலே பரவியிருக்கிறதே சொறி சிரங்கு, அது மாதிரி தான் ஜப்பானியரது இப்படை யெடுப்பும். கொஞ்சம் உபத்திரவமாகத்தானிருக்கும் சொறி. ஆனால் அது ஆளைக் கொல்லுமா? நீண்ட நாட்கள் தானிருக்குமா? கந்தக சம்பந்தமான மருந்தொன்றிருக்கிறது. அதை இரண்டு தடவைகள் போட்டாலே சிரங்குகள் தாமாகவே உதிர்ந்து விடப் போகின்றன. அதே போல் இன்னும் சில நாட்களில் ஜப்பானியப் படைகள் திரும்பவும் பர்மாவிற்குள் பதுங்கி மறைந்து, பட்ட காயங்களைக் குணப்படுத்திக் கொள்ள முயலப் போகின்றன. ஜப்பானைப்பற்றி இப்பொழுது அதிகம் கவலைப் பட வேண்டியதில்லை.

ஒவ்வொருவர் உடைமைச்கும் ஆபத்து

ஹிட்லர் விஷயத்தைக் கவனிக்க ஆரம்பித்தோம். எங்கேயோ வந்து விட்டோம். இப்பொழுது நடக்கும் யுத்தமும் இப்படித் தானே. போலந்திலே முதலில் ஹிட்லர் வைத்த வெடி, பிரமாதமாக வெடித்து, உலகெல்லாம் சிதறி, எங்கும் நெருப்புப் பிடித்துக் கொண்டு எரிகிறது. 'இது எங்கள் வீட்டு நெருப்பில்லை; உங்கள் வீட்டு நெருப்புத் தான். அதனாலே இதை அணைக்க நம்மாலே முடியாது' என்று யாரும் சொல்லிக் கொண்டிருப்பதற்கில்லை. இது பொது விஷயம், எல்லோரும் ஒத்துழைத்துச் செய்ய வேண்டிய காரியம். இல்லாவிட்டால், ஒவ்வொருவருடைய உடைமைக்கும் ஆபத்து உண்டாகிவிடும். இதை நினைவில் வைத்துக் கொண்டு, யுத்த முயற்சிக்கு ஒவ்வொருவரும் உதவி செய்ய வேண்டும்.

ஹிட்லருடன் கைகோத்துக் கொண்டவர்கள் எல்லாம் இப்பொழுது தங்கள் முடிவு காலம் சீக்கிரமே வந்து விடும் என்பதை உணர்ந்திருப்பார்கள். இருபது வருடகாலமாகத் தான் ஜெர்மன் மக்கள் இந்த இரண்டாவது மகா யுத்தத்திற்குத் தயார் செய்யப்பட்டிருக்கிறார்கள். ஹிட்லர் பதவியேற்றது முதலே, உலகை ஜெயித்தாள வேண்டும் என்ற பகற்கனவையே திரும்பத்திரும்பக் கண்டு கொண்டிருந்திருக்கிறார். அந்த எண்ணத்தோடு, யூதர்களையெல்லாம் விரட்டி யடித்தார். 'அவர்கள் எல்லாம் தொலைந்தாயிற்று, இனி

S. S. S.

நேஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்

வருமான வரி கிடையாது ;
பத்திரமாய் வைத்திருக்கலாம் ;
தங்கத்தைவிடப் பாதுகாப்பானது ;
வாங்குவதற்கு எளிது ;
வட்டியும் மிகுதி ;
எதிர்கால அச்சத்திலிருந்து காப்பாற்றக் கூடியது.

நேஷனல்
சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகளை
வாங்குங்கள்

எனக்கே ஜெயம்' என்று பறை சாற்றினார். அவருக்கு ஒத்தாக கொப்பல்ஸ், கொயரிங், ஹிம்லர் போன்ற சூரர்கள் தோன்றினார்கள். அவர்களுடைய நாமஸ்மரணை கூட, இப்பொழுது அதிகம் காணோம்.

தலை நகரா ? பாழ் நகரா ?

ஜெர்மனியின் தலை நகரான பெர்லின் இப்பொழுது தலை நகராக இல்லை. அது பாழ் நகராக ஆகிக்கொண்டு வருகிறது. அறுபது எழுபது லட்சம் பேர்கள் வசித்துக்கொண்டிருந்த நகரம். பிரமாண்டமான தொழிற்சாலைகள் பல நிறைந்த நகரமது. அதை நேச தேச விமானிகள் விடாது நொறுக்கி வருகிறார்கள். அதைத் தவிர, ப்ராங்பர்ட், எஸ்ஸன் போன்ற தொழிற்சாலை நகரங்கள் மீதும், வட பிரான்ஸ், ஹாலந்து தேசங்களில் உள்ள தொழிற்சாலைகள் மீதிலும், ஆயிரக் கணக்கான விமானிகள் அனுதினமும் பறந்து சென்று, பதினாயிரக் கணக்கான டன் வெடிகுண்டுகளை மழையாகப் பொழிந்து கொண்டிருக்கிறார்கள். ஹிட்லருடைய ராணுவ பலம் அவ்வளவுக் கவ்வளவு அநுதினமும் குறைந்து கொண்டேதானிருக்கும்?

இவ்வாறு ராணுவத்திற்கு வேண்டிய விமானங்கள், டாங்கிகள், லாரிகள், பீரங்கிகள், வெடி மருந்துகள், உணவுப் பொருள்கள் எல்லாம் தயாரிக்கப்படும் சாலைகள் பாழாகிக் கொண்டிருந்தால், முன்னணியில் சிக்கிக்கொண்டிருக்கும் படைகளின் கதி என்ன ? முன்னாலும் போக முடியாது. நின்றும் போராட முடியாது. பின் வாங்கத் தான் வேண்டியிருக்கிறது. அதிலே ஏராளமான சேதம்.

ஒரு வாரம் கழிந்தால், காயம் பட்டவர்கள், கொல்லப் பட்டவர்கள், ராணுவத்தில் சேவை செய்யவே லாயக்கற்றுப் போனவர்கள் என்ற ஜாபிதாக்களில் மொத்தத்தில் பல்லாயிரக் கணக்கானவர்களின் பெயர்கள் பதிவாகி விடுகின்றன. முனை முறியாது பல யுத்த தளவாடங்களை ஆங்காங்கே விட்டு விட்டு, பின் வாங்க வேண்டிய சந்தர்ப்பங்களும் நேரிட்டதுண்டு.

ருஷ்யர்களுக்கோ ஏராளமான தொழிற்சாலைகளில் பல லக்ஷக் கணக்கானவர்கள் எவ்வித ஆபத்துமின்றி, யுத்த தளவாடங்களைச் சிருஷ்டித்துத் தள்ளிக் கொண்டேயிருக்கிறார்கள். ருஷ்ய சேனையிலே இருப்பவர்களனைவரும், தேச பக்தி கொண்ட இளம் வீரர்கள். தவிர, அவர்களது சேனையிலே இருப்பவர்களனைவரும் ஒரே ருஷ்யர்கள் தான்.

பெரிய ‘ டக் ஆப் வார் ’

ஆனால், ஹிட்லரது படையிலோ பல நாட்டினர், பலாத்காரத்தினால் கொண்டு வந்து சேர்க்கப்பட்டிருக்கின்றனர். போராடித் தொலைக்க வேண்டுமே என்று போராடுகிறவர்களே அதிகம். அவர்கள் எல்லாம் ஹிட்லருக்கு, விரோதமாகத் திரும்பத் தக்க தருணத்தையே எதிர்பார்த்திருப்பார்கள். அந்தத் தருணமும் சீக்கிரமே வரப் போகிறது என்பது பிரதம மந்திரி சர்ச்சிலின் பிரசங்கத்திலிருந்தும், நேச தேசத் தரைப் படைகளை அழைத்துக்கொண்டு மேற்கு ஐரோப்பாவில் இறங்கப் போகும் ஜெனரல் மாண்ட்கமரியின் பேச்சிலிருந்தும் நன்றாகத் தெரிகிறது. சீமை விமானப் படைகளை விட, சீமையில் வந்திறங்கியுள்ள அமெரிக்க விமானப் படைகள் உருவில் பெரிதாகி விட்டனவாம். இப்பொழுது மேற்கண்ட இரு தேசப் படைகளுந் தான், ஹிட்லரின் ஐரோப்பா மீது பாயப் போகின்றன. இது ஒரு பெரிய ‘டக் ஆப் வார்’ தான். பள்ளிக்கூடங்களில் இரு கட்சியினர் ஒரு பெரிய வடத்தை இரு புறமும் பிடித்து இழுப்பார்களே, அந்தமாதிரி போட்டி தானிது. இதிலே நமது அபார பலத்தால், இறுதியில் ஜெயிக்கவே போகிறோம் என்ற திடமான நம்பிக்கை நேச தேசத் தலைவர்களிடம் இருக்கிறது.

அதிகாரப் பித்துக் கொண்டவர்

படையெடுப்பிற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் எல்லாம் செய்யப்பட்டு வருகின்றன. மத்யரைக் கடல் பிரதேசத்திலும் ஜரூரான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. தென் பிரான்ஸிலும், பால்கன் பிரதேசங்களிலும் நேசப் படைகள் போயிறங்கக் கூடும் என்று கூறப்படுகிறது. ஹிட்லருக்கும், ஜெர்மனிக்கும் நாலா புறங்களிலிருந்தும் ஆபத்துக்கள் நெருங்கிக் கொண்டிருக்கின்றன என்பதை யாராலும் மறுக்க முடியாது. ஆனால், ஹிட்லரும் ஒரு முரட்டு ஆள். எக்கவலையுமற்ற தடி பிரமசாரி. யார் எக்கேடு கெட்டால் அவருக் கென்ன ? தேச மக்கள் லக்ஷக் கணக்கில் பலியானால் என்ன ? ஜெர்மனி தவிடுபொடியானால் தான் என்ன அவருக்கு ? அவர் அதிகாரப் பித்துக் கொண்டவர். பைத்தியம் செய்கிற வேலைகளுக்கு ஒரு கணக்குண்டா ? அளவுண்டா ? எல்லையுண்டா ? பைத்தியத்தைப் பிடித்து அடக்க வேண்டியது ஊராரின் பொறுப்பு. அந்த ஊராரிடை பொறுப்பு வாய்ந்தவர்கள் சிலரிருப்பார்கள். அவர்கள் அக்காரியத்தைச் செவ்வனே செய்வார்கள். அவர்களுக்கு மற்றையோர் தம்மாலான உதவியெல்லாம் செய்து கொடுக்க வேண்டும்.

ஜெர்மன் இராணுவத்திற்கு உயிர்

ஹிட்லர் கடைசிவரை ஒரு கை பார்த்துவிட விரும்புவார். அடுத்தபடி என்ன வரும் என்பது அவருக்குத் தெரியும். அதனால் தான், பிறரை நம்ப விரும்பாது, ஹங்கேரி, ருமேனியா ஆகிய இரு நாடுகளையும் அந்தந்த நாட்டாரின் ஆளுகையிலிருந்து பிடுங்கி, எங்கும் ஜெர்மானியர்களைக் கொண்டு வைத்துவிட்டார். ருமேனியாவில் எண்ணெய் வயல்களிருக்கின்றன. அவற்றைக் காத்தாக வேண்டும். அவை தானே ஜெர்மன் ராணுவத்திற்கு உயிர். கார்ப்பேதியன் மலைப் பிரதேசங்களிலே நிறையப் படைகளை வைக்க வேண்டும். அங்கு ருஷ்யர்களைக் கொஞ்சம் தடுத்து நிறுத்தலாம். யுத்தம் மெள்ள மெள்ள ருஷ்ய மண்ணை விட்டு, அசல் ஜெர்மனியை அணுகிக் கொண்டிருக்கிறது. ஒரு குறிப்பிட்ட சமயத்திலே, மேற்றிசையிலே இரண்டாவது போர் முனை ஆரம்பமாகலாம். அப்புறம் யுத்தம் திடீரென்று நின்று போகலாம். அல்லது தொடர்ந்தும் நடக்கலாம் என்றும் சொல்வதற்கில்லை.

இத்தகைய நிலைமை ஏற்பட்டதற்கு, ருஷ்யர்கள் அடைந்த அபார வெற்றி தான் மூல காரணமாகும். அந்த வெற்றியைப் பெற, அவர்களுக்கு, இத்தாலியில் ஏராளமான நாஸிப் படைகளை நேச தேசப் படைகளும் வலித்திழுத்து, பேருதவி புரிந்திருக்கின்றன.

முன் ஏற்பாடுகள் பைசாவுக்கும் உதவி இல்லை

ருஷ்யர்கள் இத்தகைய வெற்றிகளைப் பெற்றதற்கு, அவர்களது பலமிக்க டாங்கிப் படைகள் ஒரு காரணம். இரண்டாவது, ருஷ்யப் படைகளை நடத்திச் செல்லும் சேனாதிபதிகளின் யுகமும், திறமையும் ஒரு காரணம். மூன்றாவது, ருஷ்யர்கள் காலாட் படைகளுடனே முன்னேறுகிறார்கள், ஜெர்மானியர் லாரிகளில் ஆட்களை ஏற்றிச் செல்லுகிறார்கள். அந்த லாரிகள் பறிபோய் விட்டால், ஜெர்மன் படை திணறுகிறது. ஆனால் ருஷ்யர்களோ, நடந்தே, ஆனால் ஊர்ஜிதமாக முன்னேறுகிறார்கள். அவர்களுடைய தலைவர்கள், ஜெர்மானியரைத் திகைக்க வைக்க, வைக்கும்படியான ‘பிளான்’களைப் போட்டு, திடீர் திடீர் என்று எங்கெங்கோ பாய்கிறார்கள். அதன் பயனாக, ஜெர்மானியர் முன் கூட்டி எதிர் பார்த்து, வருஷக் கணக்கில், ஏராளமான செலவில் கட்டி எழுப்பிப் பாதுகாத்து நிற்கும் பாதுகாப்பு ஏற்பாடுகள் எல்லாம், பைசாவிற்கு உதவாமல் போய்விடுகின்றன. டினீஸ்டர், பக் நதிப் பிரதேசங்களில் இப்படித் தானே ஆயிற்று கதை! அந்த நதிக் கரைகளில் ஜெர்மானியர் பெரிய அரண்களை எழுப்பி யிருந்தார்கள். ஆனால் ஒரு நாள் கூட, சரியாக அங்கெல்லாம் பெரிய யுத்தங்கள் நடக்கவில்லை. ருஷ்யர்களின் திடீர் ‘பிளான்’கள் ஜெர்மானியரைக் கலங்க அடித்துக் கொண்டிருக்கின்றன. அது தவிர, ஹிட்லர் கட்சி, கோணல் கட்சி. அது ஜெயித்தால் அக்ரமம். அதனால் தான் ஹிட்லருக்குத் தோல்வி மேல் தோல்வி ஏற்பட்டு வருகிறது.

(7-ம் பக்கம் தொடர்ச்சி)

இந்தியர் ஜாவாவில் ஒரு பெரு நிதி பெற்றிருக்கிறார்கள். தொழில் தேடிக் கொடுக்கும் கழகத்தார் என்று ஒரு கழகத்தார் டோஜோவால் ஏற்படுத்தப் பட்டிருக்கிறார்கள். ஜப்பானியருக்குத் தொழில் தேடிக் கொடுப்பது, அவர்கள் வேலை. பெப்ரவரி 12-ந் தேதி படாவியோ இதைப்பற்றிப் பேசும்போது, இந்தக் கழகத்தில் கிளைச் சங்கங்கள் ஜாவாவின் எல்லாப் பாகங்களிலும் இருக்கின்றன என்று சொல்லிற்று. இந்தியாவிலும் அவைகள் ஏற்படுத்தப்படாதபடி செய்வது நமது கடமையன்றோ ?

—சென்னை அகில இந்திய வானொலி நிலையத்திலிருந்து மார்ச்சு மாதம் 15-ம் தேதி “அச்சு நாட்டுப் பிரசாரம்” என்னும் தொடரில் ஒலி பரப்பப்பட்ட பிரசங்கம்.

யுத்த நாட் குறிப்புக்கள்

பிரிட்டனும் ஜெர்மனியும்.

மார்ச்சு 22.—யுத்தப் பதக்கங்களை குறித்த விவாதத்தை மிஸ்டர் சர்ச்சில் காமன்ஸ் சபையில் ஆரம்பித்து வைத்தார்.

ருமேனிய முதன் மந்திரி மார்ஷல் ஆன்டெனெஸ்குவையும், டிபுடி முதன் மந்திரி மிஹெய்ல் ஆன்டெனெஸ்குவையும் ஹிட்லர் அழைத்திருக்கிறார்.

மார்ச்சு 24.—பிரிட்டனிலுள்ள அமெரிக்கப் படைகளுக்கு மிஸ்டர் சர்ச்சில் ஒரு பிரசங்கம் செய்தார்.

டாங்கிப் படைகளின் நிலைமையைக் குறித்து விவாதிக்கும் பொருட்டு, காமன்ஸ் சபை, ஒரு ரகசிய சபையாக மாறியது.

மார்ச்சு 26.—ஒரு வானொலிப் பிரசங்க வாயிலாக, யுத்த நிலை நிலைமையை மிஸ்டர் சர்ச்சில் விளக்கினார்.

அமெரிக்காவும் அட்லாண்டிக்கும்.

மார்ச்சு 22.—யு. என். ஆர். ஆர். ஏ-க்கு 135 கோடி டாலர் ஒதுக்கிவைக்கவேண்டுமென்று அமெரிக்க செனெட் சபை தீர்மானித்திருக்கிறது.

மார்ச்சு 24.—ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் உள்ள சுயேச்சை நாடுகள், அச்சு நாட்டவர்களின் அல்லல்களுக்கு அஞ்சி வந்து சேருகிறவர்களுக்கு, தற்காலிகமாக இடங்கொடுக்கத் தக்க ஏற்பாடுகளை செய்ய வேண்டுமென்று மிஸ்டர் ரூஸ்வெல்ட் குறிப்பிட்டார்.

ஜெர்மனி ஜப்பான் ஆகிய நாடுகளின் எதிர்கால நிலைமைபற்றி, அமெரிக்க மந்திரி மிஸ்டர் கார்டெல் ஹல் குடியரசுப் பிரதிநிதி சபையோருக்கு ஒரு பிரசங்கம் செய்தார்.

ஜூலை முதல் தேதிக்குள் ½ கோடி அமெரிக்கப் படைகள் வெளி நாடுகளிலிருக்குமென்று, மிஸ்டர் ரூஸ்வெல்ட் பத்திரிகை நிருபர்களிடம் கூறினார்.

இந்தியா, பர்மா, இலங்கை.

மார்ச்சு 22.—ஜப்பானியப் படைகள் **டட்டிம்முக்கும் இம்பாலுக்கும் இடையேயுள்ள மணிப்பூர் சமஸ்தானத்திற்குள் எல்லைப்புரத்தைக் கடந்து வந்துவிட்டன.** மற்ற பர்மியப் போர் முனைகளிலெல்லாம் நேச நாட்டுப் படைகள் முன்னேறிக் கொண்டிருக்கின்றன.

மார்ச்சு 23.—200 மைல் நீளமுள்ள போர் முனையில் ஜப்பானியப் படைகள் எதிர்த்துத் தாக்கிக் கொண்டிருக்கின்றன.

மார்ச்சு 24.—ஹுகாங் பள்ளத்தாக்கில் நேச நாட்டுப் படைகள் முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள்.

மார்ச்சு 25.—மோகாங் பள்ளத்தாக்கில் **ஷாடுசுப்** என்னும் பட்டணத்தை நேச நாட்டுப் படைகள் கைப்பற்றிக் கொண்டன.

இன்று காலையில் காக்ஸ்பஜார் பகுதியில், சில எதிரி விமானங்கள் வந்து தாக்கின.

மார்ச்சு 28.—வட பர்மாவில் சீனத் துருப்புக்கள் கான்-க்ளவியாங் என்னுமிடத்தைக் கைப்பற்றிக் கொண்டன.

ரஷ்யாவும் பின்லாந்தும்.

மார்ச்சு 22.—பெர்வோமெய்ஸ்க், கான்ஸ்டான்டினேப்கா, கொரொஹோப்கா, நடிஷினோ முதலிய பல விடங்களை சோவியத் படைகள் கைப்பற்றின.

மார்ச்சு 23.—டார்னபோல்-புரோஸ்குரோப் பகுதியில், ரஷ்யப் படைகள் புதிதாகத் தாக்க ஆரம்பித்திருக்கின்றன. **கபுசின்டஸி, டரென்பௌலா, பேஷ்கி,** முதலிய நூற்றுக் கணக்கான இடங்களைக் கைப்பற்றினார்கள்.

சோவியத் ரஷ்யாவிற்கும் பின்லாந்திறகும் நடைபெற்று வந்த சமரசப் பேச்சுக்கள் இன்னும் முடிவடையவில்லையென்று அமெரிக்க மந்திரி மிஸ்டர் ஹாடெல் ஹல் குறிப்பிட்டார்.

ரஷ்ய பின்லாந்து சமரசப் பேச்சுக்களின் போக்கைக் குறித்து ரஷ்ய அரசாங்கம் அவ்வப்போது தமக்கு அறிவித்துக் கொண்டிருப்பதாக, காமன்ஸ் சபையில் மிஸ்டர் ஈடன் குறிப்பிட்டார்.

மார்ச்சு 24.—ருமேனிய எல்லைப்புரத்திற்கப்பால் 15 மைல் தூரத்தில் செம்படைகள் வந்துவிட்டன. அன்றியும் டார்னபோல்-லோ ரயில்வேயைத் துண்டித்து, சேரெட்ஸ் ஆற்றையும் கடந்து விட்டன. **வாஸனெ சென்ஸ்கு, சியார்ட்கோப், ஹ்ருசிப்பிடின், சாலெசிஸ்க்,** முதலிய 400 இடங்களைக் கைப்பற்றின.

மார்ச்சு 25.—ப்ரோஸ்குரோப், **டியாஷினியா** ஆகிய ஊர்களை ரஷ்யப் படைகள் கைப்பற்றின.

மார்ச்சு 26.—ருமேனியா எல்லைப்புரத்திற்கு செம்படைகள் வந்து சேர்ந்துவிட்டன. **பால்டியையும் ரென்டேலையும்** கைப்பற்றிக் கொண்டன.

மார்ச்சு 27.—காமனெட்ஸ், பொடோல்ஸ்கி முதலிய இடங்களை ரஷ்யப் படைகள் கைப்பற்றிக் கொண்டன.

மார்ச்சு 27.—மோனஸ்டரிஸ்கா, போட்டோகினேட்டி, கொரொபிட்ஸ், வான் கோப்ட்ஸி, ஜெர்மோலின்ட்ஸி, ஹரொடென்கா, யஸ்டாப்னு, சோவ்ரான் முதலிய இடங்களை செம்படைகள் கைப்பற்றின.

மார்ச்சு 28.—நிகெலேப், **கூஸ்டெட்ஸ், ஸ்லொபோட்கா** முதலிய இடங்களை ரஷ்யர்கள் கைப்பற்றினார்கள்.

இத்தாலி, ஆப்பிரிக்கா, மத்தியதரைக் கடல் பகுதி.

மார்ச்சு 22.—காசினோவில் கைகலந்த போராட்டம் நடைபெற்றது.

மார்ச்சு 24.—கெய்ரோவில பால்கன் நாடுகள் சம்மந்தமாக நடைபெற்ற விவாதங்களில் கலந்து கொண்டு, மத்திய தரைக் கடற்பகுதியின் மகா படைத்தலைவரான ஜெனரல் சர் மெய்ட்லான்ட் வில்சன், தன் காரியாலயத்திற்குத் திரும்பினார்.

மார்ச்சு 28.—காசினோவிலும் மற்ற இத்தாலியப் போர் முனைகளிலும் நடைபெறும் யுத்தத்தைக் குறித்த தோர் கேள்விக்கு விடையளித்த மிஸ்டர் சர்ச்சில் சொன்னார்: "விரைவில் முன்னேற்றமடையாதது பற்றி நான் அடைந்துள்ள ஏமாற்றத்தை, நான் மறைக்கவில்லை."

விஷி, சுயேச்சை பிரான்சு, எதிரிகள் வயப்பட்ட நாடுகள்.

மார்ச்சு 23.—ஹங்கேரியி லிருந்த ஜெர்மன் படைகள் ருமேனியாவுக்குள் புகுந்து அதைக் கைப்பற்றிக் கொண்டன.

ஹங்கேரியில் வயது வந்தவர்களாயுள்ள அனைவரும் படையில் சேரவேண்டுமென்னும் கட்டளை பிறந்திருக்கிறது.

தன்னை வந்து சந்திக்கும்படி பல்கேரிய ரீஜெண்டுகளை ஹிட்லர் அழைத்திருக்கிறார்.

மார்ச்சு 25.—பல்கேரியப் படைகளை உபயோகித்துக் கொள்வது பற்றி ஹிட்லர் விதித்த எல்லா நிபந்தனைகளையும் ஒப்புக்கொண்டதாக, பல்கேரிய ரீஜென்ஸி கௌன்சில் தீர்மானித்து விட்டது.

நடு நிலைமை நாடுகள்.

மார்ச்சு 22.—முக்கியமான பொருட்களுக்கு வெளி நாடுகளின் கைகளை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதனால் எவ்வளவு பாதகம் நேரக் கூடும் என்பது பற்றி, டிவாலெரா அயர்லாந்து மக்களுக்கு அறிவித்தார்.

மார்ச்சு 28.—அயர்லாந்தி லிருக்கும் அச்சு நாடுகளின் ஸ்தானீகர்களைப் பற்றி அயர்லாந்திடம் அமெரிக்கா நடந்து கொள்ளும் முறையை பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் பூரணமாக ஒப்புக்கொள்வதாக மிஸ்டர் சர்ச்சில் இன்று கூறினார்.

தூரக் கிழக்கு நாடுகள்.

மார்ச்சு 22.—பிஸ்மார்க் தீவுக் கூட்டத்தைச் சேர்ந்த **அமிரா எலாமுசோ** என்னும் தீவுகளை நேச நாட்டுப் படைகள் கைப்பற்றிக் கொண்டன.

யுத்த நிலைமையைக் குறித்து டோஜோ விடுத்த அறிக்கையில், நிலைமை மகா மோசமாக இருக்கிறதென்று குறிப்பிடுகிறார்.

மார்ச்சு 23.—நியூ கினியைச் சேர்ந்த சீத்தபி தீவுக்கப்பால், ஜப்பானிய நாசகாரிக்கப்பல் ஒன்றும் சாமான் கப்பல்கள் இரண்டும் மூழ்கி விட்டன.

முன்பு பிரிட்டிஷ் ஸ்தானீகராக ஜப்பானி லிருந்த சர் ராபெர்ட் கரெய்கி "ஜப்பான் கடைசி வரை போராடும்" என்று கூறினார்.

மார்ச்சு 21.—மேலும் 11 ஜப்பான் கப்பல்களை நேசநாட்டுப் படைகள் மூழ்கடித்ததாக அமெரிக்க கப்பற் படை யறிக்கை கூறுகிறது.

மார்ச்சு 28.—**அமோ. ட்ரேவோ** என்னும் இரண்டு தீவுகளை நேச நாட்டுப் படைகள் கைப்பற்றிக் கொண்டன.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.